மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

# இசைப் பெரியார் மூவர்

ஆசிரியர்

திரு S. ருத்திரபதியார் M. A.

தமிழ் விரிவுரையாளர்,

மத்தியக் கல்லூரி, பங்களூர்.

அகில இந்தியப்பதிப்பகம்

கும்பகோணம் — பங்களூர்.

பதிப்புரிமை] 1946 [ரூ. 1-0-0

## பொருளடக்கம்

—தியாகராஜர்

—முத்துத்தாண்டவர்

—கனகதாசர்

Printed at The Madras Law Journal (Branch) Press,
Tirupuvanam, T.D.R. for A.P.C.—P.C. 4744.

செந்திலாண்டவன் சேவடித்துணை.

# முகவுரை

கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

உலகில் எண்ணரிய பிறவிகளில் மானிடப் பிறவிதான் எல்லாவற்றையுங் காட்டிலும் உத்தமப் பிறவியாகும். பெரியோர்கள் இத்தகைய பிறவி வாய்த்தபோது, இறை வழிபாடு இயற்றி, அதைப் பயன்படுத்தி, அந்தமில் இன்பமாகிய பேரின்பத்தை எய்துகின்றார்கள். மக்களுக்கு உறுதிப் பொருள்களாவன அறம், பொருள் இன்பம், வீடென்பனவாகும். இவ்வுறுதிப் பொருள்களை அடைதலே மக்களின் குறிக்கோளாக இருத்தல்வேண்டும்.

மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் தத்தமக்கென ஒரு குறிக்கோள் கொண்டிருத்தல்வேண்டும். குறிக்கோள் இல்லாத வாழ்வு குன்றிய வாழ்வாகும். மக்களை மாக்களினின்றும் வேறுபடுத்துவது மாண்புறு கல்வியாகும். கல்வியின் விழுப்பயன் கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியாம் கடவுளை யடைதலாம். நம்மையும் நமமுடையானையும் ஒன்றுபடுத்தாக் கல்வி கல்வியாகாது. பரம்பொருளை யடைதற்குப் பல வழிகள் உண்டு. பண்ணோடு பாடி, பரமனை மனமொழி மெய்களால் வழிபட்டு, அவனருள் பெற்று, மீண்டுவாரா நெறியாகிய வீட்டுநெறி யெய்தியோரை நாம் பெரியாரென்றும், மகான்களென்றும் கூறுகின்றோம்.

இறைவனிடம் நம்மனத்தை ஈர்த்து அவனுடன் ஒன்றி நிற்கச் செய்யும் வழிகளில், இசையை விடச் சிறந்த வழி எதுவும் இல்லை. இறைவன் இசைவடிவாயிருக்கின்றான் என்பது நம்பியாரூராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் "ஏழிசையாய் இசைப் பயனாய், என்னுடைய இன்னமுதாய்'' என்று இறைவனைத் துதிப்பதனால் விளங்குகின்றது. இசையுடன் கூடிய இறையன்பு மேலிட்ட பெரியார் ஒரு சிலரின் வாழ்க்கை வரலாற்றை நம் செந்தமிழ் நாட்டுத் தமிழ் மாணவர் படித்துப் பயன் பெறுவான் வேண்டி இச்சிறுநூலை எழுதி வெளியிடுகின்றேன்.

இந்நூலில் குற்றங்கள் மலிந்து காணப் பெறலாம் அன்பர்கள் அவற்றை அடியேனுக்கு எடுத்துக் காட்டுவார்களாயின், அக்குறைகள் மீண்டும் நேராவண்ணம் பார்த்துக் கொள்ளுவதோடு, குறைகளை எடுத்துக் காட்டிய அன்பர்கள்பால் நன்றி பாராட்டுவேனாக.

இத்துறையில் எளியேனைப் புகுத்திய இறைவனை மனமொழி மெய்களால் வழுத்துகின்றேன். இத்தகைய நூல் ஒன்று வேண்டுமென்று வற்புறுத்திப் பல்லாற்றானும் ஊக்கியும், உதவியும் வரும் என் அன்பர் திரு. N. S. வாசன் அவர்கட்கு என்மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பங்களூர்,
25—5—46.

S. ருத்திரபதி.

# இசைப் பெரியார் மூவர்

# ஸ்ரீ தியாகராஜர்
# வாழ்க்கை வரலாறு

## 1

### இளமையும் கல்வியும்

நாவலர் புகழும் நாவலந் தீவில், பாவலர் போற்றும் பாரத நாட்டில், பரம்பொருளிடம் பரம பக்தி செலுத்தி வீடுபேறுற்றவர்கள் பல்லாயிரவர். சிறப்பாகத் தென்னுட்டில் சிவ வழி பாட்டிலும், வைணவ வழிபாட்டிலும் ஈடுபட்டுக் கடைத் தேறியவர்கள் எண்ணிறந்தோராவர். தமிழ் பரவிய பெருநிலத்திலே எண்ணற்ற அடியார்கள் தோன்றி, என்றும் அழியாத முறையில், மக்கள் பாடி உய்யுமாறு, திருப்பாசுரங்கள் அருளிச் செய்துள் ளார்கள்.

சைவசமய குரவர் நால்வரையும், அறுபத்து மூன்று நாயன்மார்களையும், வைணவ ஆழ்வார் பன்னிருவரையும் தோற்றுவித்த பெருமை தமிழ் நாட்டிற்கேயுரித்து. கங்கையினும் புனிதமெனப்போற்றும் காவிரிநதிபாயும் சோழவள நாட்டில், தஞ்சை ஜில்லாவில் உள்ளது திருவாரூர் என்னும் திவ்விய க்ஷேத்திரம். அத்தலத்தில் 18-ம் நூற்ருண்டில், பூரத்துவாச கோத்திரத்தைச் சேர்ந்த, தெலுங்குப்

பிராம்மண வகுப்பினரான கிரிராசப் பிரம்மம் என்பார் ஒருவர் இருந்தார். இவர் ஆரியம் தெலுங்கு இருமொழிகளிலும் புலமை வாய்ந்தவர். சங்கீத வித்துவானாகவும் விளங்கினார். இவரால் பாடப் பெற்ற வேதாந்தக் கருத்துக்களடங்கிய பாடல்களை தஞ்சையில் ஆட்சி செலுத்திய சகாஜி மன்னர் பாராட்டி, இவரைப் போற்றி வந்தார். இவருக்கு ஐந்து புத்திரர்கள் தோன்றினார்கள். பிரமமம் என்பது இவரது குடிப்பெயராகும். ஐந்தாவது புதல்வருக்கு ராமப் பிரம்மம் என்று பெயரிட்டார்.

ராமப் பிரம்மம் சிறந்த பாகவதர். மக்கள் மனம் பூரிக்கும்படி கதை செய்வதில் மிகச் சமர்த்தர். அவருக்கு இரண்டு புத்திரர் தோன்றினர். இரண்டா மவர்தான் தியாகராஜராகும். இவர் பிறந்த வருஷம் 1759 என்பர். இவருடைய பெற்றோர்கள், இவர் திருவாரூரில் பிறந்த காரணத்தால், அவ்வூரில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் தியாகராஜப் பெருமான் பெயரையே இவருக்கும் சூட்டினர்.

தியாகராஜருக்கு ஐந்து ஆண்டுகள் நிரம்பின. வித்தியாரம்பம் செய்ய வேண்டிய பருவம் வந்தது. இவரைத் திண்ணைப் பள்ளிக்கூடம் அனுப்பினார்கள். தியாகராஜருடைய தமையனாரும் அப்பள்ளியிலே சேர்ந்து படித்து வந்தார். திண்ணைப் பள்ளிக்கூடம் ஒரு சந்தில் அமைந்திருந்தது. பள்ளியாசிரியர் நல்ல பாண்டித்தியம் அற்றவர். தம்முடைய கடமை இன்னதென்றுணராத ஆசிரியர் அவர். எங்கேயாவது சுற்றித் திரிபவர். பள்ளிப் பிள்ளைகட்குப் பாடங்

கற்பிப்பது மிகக் குறைவு. அக்குழந்தைகளைத் தண்டிப்பதும் அதிகம். அப்பிள்ளைகளின் பெற்றோர் களும், பிள்ளைகள் வீட்டிலிருந்து தங்கட்குத் தொல்லை கொடுக்காமல், தூரத்தேயுள்ள திண்ணைப் பள்ளியில், ஆடுமாடுகள்போல் அடைபட்டுக் கிடந்து வந்தாற்போதும் என்று எண்ணுகின்றவர்கள். ஆகவே, மாணவர் கல்வி முன்னேற்றமடையாது ஒழிவதை, ராமப் பிரம்மம் அறிந்தார். தந்தை யொருவனது கடமை இன்னதென் றுணைந்தவர் அவர்.

"தந்தை மகற் காற்றும் நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்ற வாய்மொழி யறிந்தவர்.

ராமப் பிரம்மத்தின் மூத்த மைந்தன், திண்ணைப் பள்ளிக்கூடத்தில், ஆசிரியரின் பிரம்படி பெற்றனே யன்றி, கல்வியறிவு பெற்றானில்லை. இதையுணர்ந்த ராமப் பிரம்மம், எவ்விதமேனும், தம் இரண்டாம் மைந்தன், தியாகராஜன், கல்வித்தேர்சசி பெற வேண்டுமென்று விரும்பினார். திண்ணைப் பள்ளிக் கூடத்தால் நன்மையில்லை என்பதை உணர்ந்தார். கல்வியின் நிமித்தம் திருவாரூரை விட்டுத் திருவையாற் றிற்குக் குடும்பத்துடன் போகத் துணிந்தார்.

ஒரு நன்னாளில் ஆரூரை விடுத்து ஐயாற்றில் குடிபுகுந்தார். திருவையாறு தென் கைலையென்று சைவர்களால் பாராட்டப் பெறும் பாடல் பெற்ற சிவத்தலமாகும். தஞ்சைக்கு மிக அணிமையில் உள்ள

அவ்வூரில் ஒரு வடமொழிக் கல்லூரியுண்டு. அதில் தமிழ் மொழியும் பயிற்றப்படுவது அறிந்தார். வடமொழிப் புலமையும், தமிழ்ப் புலமையும், பெற விழைவோர் அக் கல்லூரியில் சேர்ந்து படித்துப் புலமை அடைவது கண்டார். அக் கல்லூரியில் தியாக ராஜரைச் சேர்க்க விரும்பினர்.

ராமப் பிரம்மம் திருவையாற்றில் குடியேறின பிறகு அங்குள்ளவர்களால் பாராட்டப் பெற்றார். கல்வியும் நல்லொழுக்கமும் ஒருங்கே வாய்க்கப் பெற்றார். "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்ற புலவர் வாக்குப்படி கற்றவர்கள், சென்றவிட மெல்லாம் சிறப்பெய்துவரன்றோ? ஆகவே ராமப் பிரம்மம், தமது வாக்கு வன்மையாலும், நற்பண் பினாலும் மக்கள் உள்ளத்தைப் பிணித்தார்.

திருவையாற்றில் குடி புகுந்தவுடனேயே தியாக ராஜரை வடமொழிக் கல்லூரியில் சேர்க்கவில்லை. சிலகாலம் ஒரு சிறு பள்ளியில் சேர்ப்பதற்கு, ராமப் பிரம்மம் எண்ணினர். நல்ல பள்ளி நிலயம் கிடைக்க வில்லை. அங்கும் ஒரு திண்ணைப் பள்ளிதான் இருந்தது. அதிலிருந்த ஆசிரியர் பலதொழில் புரிபவர். பணம் வட்டிக்குக் கொடுத்து வாங்குதல், சோதிடங்கூறுதல், புரோகிதம் புரிதல், சூதாடுதல் முதலிய பல தொழில்களுக்கிடையே உபாத்திமைத் தொழில் புரியும் உத்தமர்.

அவரைப் பார்த்ததும் ராமப் பிரம்மத்திற்குத் தம் அரும் புதல்வனை, அவரிடம் ஒம்படை செய்ய

மனமிசையவில்லை. சில நாட்கள் தாமே ஆசிரியத் தொழிலேற்று, தியாகராஜருக்குக் கல்வி புகட்டி வந்தார். ராமப் பிரம்மம் கற்றவழி நிற்கும் நிலையினிலும், தம் மைந்தனுக்கு உபதேசித்து வந்தார். பெற்றோர் தம்முபதேச மொழிகளால், தம் மக்களைத் திருத்துவதைக் காட்டினும், தாம் நடந்து காட்டுவதால், திருத்துவது மேலான வழியாகும். கற்றுப் பிறர்க்குரைத்து, தாம் அவ்வழி நில்லார் வெற்றுரையால் விளையும் பயன் யாது? ஆகவே, மக்கட்கு உதாரணமாய், தாய் தந்தையர் நடந்து காட்டுவரேல் அதனால் விளையும் பயன் அதிகமாகும். மலையத்தனை விரிவுரையைக் காட்டினும், கடுகத்தனை நடந்து காட்டுதல் விசேடமாகும் என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார். இம்முறையைக் கடைப்பிடித்து ராமப் பிரம்மம், ஐந்தாண்டுகள் தம் வீட்டிலேயே, தியாகராஜருக்குக் கல்வி பயிற்றி வந்தார். பின்னர், தியாகராஜரை, வடமொழிக் கல்லூரியில் சேர்க்கத் தீர்மானித்தார் அவர். தியாகராஜருடைய தாயார் சாந்தம்மையார் என்பவர்; அவர் தம் மைந்தன் வடமொழிக் கல்லூரியில் சேர்ந்து படிப்பதைக் காட்டிலும், தம் கணவன் கைக்கொண்ட பாகவதத் தொழிலைக் கைப்பற்றுவதையே மிகவும் விரும்பினார்.

ராமப் பிரம்மத்திற்கும், அவர் மனைவியார்க்கும், மைந்தன் தியாகராஜரின் கல்வி விஷயமாய் வெகு நேரம் வாக்குவாதம் நிகழ்ந்தது. சாந்தம்மையார், தம் மகன், புரந்தரதாசரைப்போல, உலக குருவாக வரக்கூடும் என்றும் ஆகவே பாகவதத் தொழிலில் விடுதலே உத்தமம் என்றும் வற்புறுத்திக் கூறினார்.

ராமப் பிரம்மம், மனைவியின் வார்த்தைகளுக்கு இணங்கவில்லை. வடமொழிக் கல்லூரியிலேயே தியாகராஜரைச் சேர்க்க வேண்டுமென்று பிடிவாதமாகப் பேசினார். கணவன் கருத்தை மறுக்க மனமின்றி, அவரது தீர்மானத்தையே ஒப்புக்கொண்டார், சாந்தம்மையார். காதலிருவர் கருத்தொருமித்தாதரவு பட்டதே இன்பமல்லவா? ஆகவே கணவன் கருத்திற்கு இணங்கினார்.

திருவையாற்றின்கண் உள்ள வடமொழிக் கல்லூரிக்கு அரசர் கல்லூரியென்று பெயர். தஞ்சையில் பதினாறும் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த அச்சுதப்ப நாயக்கர் காலத்தில், அவருடைய முதன் மந்திரியாகிய ஸ்ரீகோவிந்த தீக்ஷிதர், இக்கல்லூரியை ஏற்படுத்தினார். பழங்காலத்துப் பல் கலைக் கழகக் கலைகளெல்லாம் இக்கல்லூரியின்கண் மிளிர வேண்டுமென அவர் விரும்பினார். ஆகவே, தக்ஷசிலை (Taxila)ப் பல்கலைக் கழகத்தின் மருத்துவக்கலையும், நலந்தாவின் தருக்கமும், உச்சயினியின் வான சாஸ்திரமும், விக்கிரமசிலையின் தந்திரக் கலையும், கண்ணோசியின் நாடகக் கலையும், காசியின் தத்துவக் கலையும், ஐயாற்று அரசர் கல்லூரியில், கற்பிக்கப்படவேண்டுமென்று முயன்றார் அமைச்சர் கோவிந்த தீக்ஷிதர். கைத்தொழிற் கல்வியையும், சிற்பக் கலையையும் புகுத்த விரும்பினார். ஆனால் அவர் விருப்பம் நிறைவேறுவதற்கு முன்னரே, அவர் பூதவுடல் நீத்தார். ஆர்க்காட்டு நவாபு தஞ்சை அரசியல் விஷயங்களில் தலையிட வாரம்பித்தார். அதனால் குழப்பம் ஏற்பட்டது. கல்லூரியைக் கவனிப்

யாரில்லை. இலக்கியப் புலவர்களைத் தோற்றுவிக்கும் இடமாக மட்டும் மாறிற்று கல்லூரி. தியாகராஜர் சேர்ந்த ஞான்று கல்லூரி நன்னிலையில் விளங்கியது. ராமாயணம், பாரதம், பாகவதம் – தமிழ்மொழியிலும், இலக்கணம், தருக்கம், வேதங்கள் வடமொழியிலும் பயிற்றப்பட்டன.

தியாகராஜர், கல்லூரியிற் சேர்ந்த நான்காண்டினுள், பலகலைகளிலும் தேர்வு பெற்றதல்லாமல், ராமாயணத்தில் தனிப்பற்று வைத்தார். எதிர் காலத்தில் ராமாவதாரப் பெருமையில் ஈடுபட்டு உருகிப் பாடும் பெரியார் ஆவதற்கறிகுறியாக அவ்விளம்பிராயத்திலேயே ராமனது எழின்மிகு குணங்களில் ஈடுபட்டார். வகுப்பில் ஆசிரியர் பாடங் கற்பிக்குங்கால், அசைவற வீற்றிருந்து, நெஞ்சு களனாக, அவர் கூறுவனவெல்லாவற்றையும் கிரகித்து வந்தார். மாணவர்கட்கு இன்றியமையாத பண்புகளாகிய, ஒருமை மனம், இடையறுவுழைப்பு, பணிவு, அன்பு, அடக்கம், தெய்வ பக்தி, முதலிய நற்பண்புகளெல்லாம் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்தார். இவரது வகுப்பு மாணவர்களில் ஒரு சோம்பேறி, இவரை வகுப்புக்குப் போகவொட்டாமல் தடுத்து, நாய் வேட்டைக்குப் போக அழைத்தார். அதற்குத் தியாகராஜர் "பொன் மான் வேட்டையாடும் ராமனுடன் சென்றுகொண்டிருக்கின்றேன். ஆகவே யான் உன்னுடன் நாய் வேட்டைக்கு வர இயலாது" என்றார்.

ஒருமுறை மற்றொரு மாணவர், "இன்றுமாத்திரம் கல்லூரிக்குப் போகாமல் எல்லா மாணவரும் நின்று

விடுவோம்" என்று கூறினன். அதற்கவர், "விசுவாமித்திரரைக் காட்டிலும் சீற்றமுள்ள ஆசிரியரைக் காண முடியுமோ? ஒருநாளும் காணமுடியாது. அத்தகைய ஆசிரியரிடத்தும் ராமன் எவ்வளவு பணிவுள்ளவனாக நடந்துகொண்டான்!" என்று பதில் கூறினராம்.

தியாகரது, இத்தகைய மறுமொழிகளால் நாம் அறியத்தக்க தென்னவெனின் "விளையும் பயிர் முளையிலே மிகும்" என்ற முதுமொழிக் கிணங்க, அவர் இளமையிலேயே புருஷோத்தமனாகிய ராமனது சரிதத்தில் விருப்பம் வைத்தாரென்றும், அவரையே தமது வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக் காட்டாகக் கொண்டாரென்றும் அறியலாம். பிறவிக் கடல் கடக்க அவனது திருவடிகளையே துணையாகக் கொண்டார். அழிதல் மாலையதாகிய உலகவின்பத்தில் அன்புவைக்காமல், அழியாத பேரின்பத்தில் கருத்தைச் செலுத்தினர். இவ்விதம் பற்றற்ற மனம் வாய்க்கப்பெற்ற தியாகராஜர், பரஸ்திரீகளைச் சகோதரிகளாகவே மதித்து வந்தார். இவரைக் கெடுக்க வேண்டி, இவருடைய தமையனின் காமக்கிழத்தி, அணுகியபோது, அவளைப் பார்த்து, தியாகராஜர், "சூர்ப்பணகை, ராமனை அணுகியஞான்று, அவளுக்கு என்ன கதி நேரிட்டதென்பதை மறக்காதே" என்று எச்சரிக்கை செய்தனுப்பினராம்.

தியாகராஜரது வகுப்பு மாணவர்கள் யாவரும் வடமொழி வியாகரணத்தையும், சப்தங்களையும் நெட்டுருச் செய்துகொண்டிருக்கும்போது, தியாக

ராஜர் மாத்திரம், ராமாயணத்தில் அடங்கியுள்ள சிறு நிகழ்ச்சியையும் விடாமல், கூர்ந்து படித்து இன்புற்று, தாம் எதிர் காலத்தில் வரையப்புகும் கீர்த்தனைகட்கு விஷயங்களைத் தாமறியாமலே சேர்த்து வைத்தார்.



## 2

## இசைச் செல்வம் பெற்றது

திருவையாற்றில், வடக்குவீதியின்கண் வேங்கட ரமண தாசர் என்ற பெரியார் இருந்தார். தாசர் என்ற பதம் அடியார் என்ற பொருளில் வழங்கப்படுகின்றது. இவரை, சொண்டி வேங் கடரமணய்யா வென்றும் சிலர் கூறுவர். இவர் தஞ்சாவூர் சம்ஸ்தான சங்கீத வித்துவானுயிருந்தார். தம் வீட்டிலேயே பல மாணவர்கட்கு இசைப் பயிற்சி அளித்துவந்தார். இனிமையாகப் பாடுவார். தியாக ராஜரின் மனம் அவர்பால் இழுக்கப்பட்டது. அவர் நடத்திவந்த இசை வகுப்புக்களுக்குப் போகத் தலைப்பட்டார். கல்லூரியில் நடத்தப்பெறும், தருக்கத் திலும் வியாகரணத்திலும், அவருக்கு வெறுப்பும், இசையில் விருப்பும் ஏற்பட்டன. ஆகவே நாள் தோறும் இரண்டொரு மணிநேரம் யாரும் அறியாத படி வேங்கடரமண தாசர் வீடு நோக்கி ஓடி மற்ற மாணவர்கள் நடுவண் வீற்றிருந்து இசைப் பயிற்சி பயின்று வந்தார். ராமப் பிரம்மத்திற்கு இச் செய்தி தெரிய வந்தது. தம்முடைய இல்லக்கிழத்தி கூறியது உண்மையாயிற்று என்பதை உணர்ந்தார்.

தியாகராஜர், தமது வாழ்வை இசையினுக்கே ஈந்தமையை அறிந்த ராமப் பிரம்மம் அவரை வேங்கடரமணய்யாவிடம் அழைத்துச் சென்று அவ ரிடம் இசைப் பயிற்சிக்காக ஒப்பித்தார்.

தியாகராஜர் முன்பே புரந்தரதாசர் கீர்த்தனைகள் பலவற்றை மனனம் செய்தவர். குருவும் அவர் தகுதி

யறிந்து கற்பித்தார். இவரது அளவற்ற தெய்வ பக்தியையும், சங்கீதப் பிரேமையையுங் கண்டு, நாரதர், ஒரு சந்நியாசி வேடந்தரித்து, தியாகராஜரிடம் எழுந்தருளிவந்து, இவருக்குத் தாரக மந்திரத்தை உபதேசித்து, "சுவரார்ணவம்" (ஸ்வரஸாகரம்) என்னும் இசை நூலையும் கொடுத்துச் சென்ருர் என்று கர்ண பரம்பரைச் செய்தியொன்று வழங்கி வருகின்றது. இந் நிகழ்ச்சி உண்மையாக இருக்கலா மெனத் தோன்றுகின்றது. ஆண்டவன் ஆன்மாக் களின் பக்குவம் அறிந்து அருள்புரிகின்ருன் என்பது பெரியோர் துணிபாகும். அரிமர்த்தன பாண்டியன் அவைக்களத்து முதலமைச்சராய் வீற்றிருந்த, வாதவூரர், பாண்டியனுக்காகக் குதிரைகள் வாங்கும் பொருட்டுத் திருப்பெருந்துறை சென்ற ஞான்று, சிவபெருமான் குருந்தமர மொன்றின்கீழ் குரு வடிவில் எழுந்தருளி, அவரை ஆட்கொள்ளவில்லையா? அதன் பின்பன்றே, வாதவூரர், மாணிக்கவாசகர் என்ற தீக்ஷாநாமம் பெற்று, திருவாசகமெனும் தேனை உலகோர் பருகி உய்யும் பொருட்டு வழங்கினர்.

"மூர்த்தி தலம்தீர்த்தம் முறையால் தொடங்கினக்கோர்
வார்த்தை சொலச்சற்குரு வாய்க்கும் பராபரமே"

என்று தாயுமானவர் அருளிய வண்ணம் பக்தி மார்க்கத்தில் நிற்கும் அன்பர்கட்கு ஆண்டவன் அருள் புரிகின்ருன் என்பதில் சற்றும் ஐயமின்று. நம் கருத்தில் உறைந்து கருத்தறிந்து முடிப்பவனன்றே ஆண்டவன்!

இசைக்குப் பேர் பெற்றவர் நாரதர். இசைத் தெய்வம். ஆகவே தியாகராஜருக்கு இசையின் நுணுக்கமெல்லாந் தெரிவிக்க வந்தார்போலும். தாரக மந்திரத்தை உபதேசித்தார் அவர். தாரக மந்திர மென்பது "ராமா" என்பதாகும். அஷ்டாக்ஷரம் அல்லது எட்டெழுத்தென்னும், "ஓம் நமோ நாரா யணாய" என வைணவர் பொன்னேபோல் போற்றி வரும் மந்திரத்தில் உள்ள "ரா" என்னும் எழுத்தும், சைவர்கள் ஐந்தெழுத்தென்று போற்றிவரும் "நமசி வாய" என்னும் மந்திரத்திலுள்ள "ம" என்னும் இரண்டாம் எழுத்தும் சேர்ந்து "ராம" என்ருகின்றது. இதன் பெருமை அளவிடற்கரிது. வாலியின் மேல் ராமபிரான் சுக்கிரீவன் பொருட்டு மறைந்து நின்று அம்பு தொடுத்தபோது, அவர் விடுத்த அம்பு தன் னுடலின் மேல் பட்டு உள்ளே செல்வதற்குமுன், அதைப் பிடித்து அதில் எழுதப் பெற்றிருந்த "ராமன்" என்ற வார்த்தையைப் படித்துப் பார்த்தான் என்று கூறவந்த மகாகவி கம்பர் அந் நாமத்தின் பெருமையை எடுத்தியம்புவது மிகவும் மதிக்கத் தக்கது.

"மும்மைசால் உலகுக் கெல்லாம் மூலமந்திரத்தை
தம்மையே தமர்க்கு நல்குந் தனிப் பெரும்பதத்தை
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை
'இராமன' என்னும்
செம்மைசேர் நாமந்தன்னைக் கண்களால் தெரியக்
கண்டான்"

என்ற நிறைமொழிக் கவியிலே கவிச் சக்கரவர்த்தி, தாரக மந்திரத்தின் பெருமையை விவரிக்கிருர்.

இசைத் தெய்வத்தினிடமாக இத்தகைய மகா மந்திரம் உபதேசிக்கப் பெற்றார் தியாகராஜர். இதனிலும் வேறென்ன பேறு வேண்டும் ஒருவருக்கு! நாதோபாசனையால் நாதனருள் பெற்று அவர் சந்நிதியில் எக்காலமும் வீற்றிருக்கும் பேறு பெற்ற நாரதரைக் காட்டினுஞ் சிறந்த குரு மண்ணுலகில் கிடைப்பரோ? மணிவாசகப் பெருந்தகையார் தாம் உபதேசம் பெற்றமையை நினைந்து,

"நானேயோ தவஞ்செய்தேன்
'சிவாயநம' எனப்பெற்றேன்"

என்று பாராட்டுகின்றார். அவர்போன்றே தியாகரும், தாரக மந்திரோபதேசம் பெற்ற பின்னர், அதைப் பாராட்டியதுடன், அம்மந்திரத்தை ஒரு லக்ஷத்துக்குமேல் உச்சரித்தார் என்று பெரியோர் கூறுவர். ராமனருளால் அங்ஙனம் ஜபித்துக் கைவரப் பெற்றார்.

நாரதரால் கொடுக்கப் பெற்ற இசைநூல் கிடைக்காது ஒழிந்தது. இந்நிலையில் தியாகராஜரது சோதரர், அழுக்காறுடையவர், அறிவிலாதவர், தியாகர் வணங்கி வந்த ராம விக்கிரகத்தையெடுத்து அவரில்லாத நேரம் பார்த்துக் காவிரி நீர்ப்பெருக்கில் வீசி யெறிந்துவிட்டார். அத்துடன் இந்நூலையும் எறிந்திருப்பாரென்று ஊகிக்கப்படுகின்றது.

---

## 3

### வாழ்க்கையின் போர்

தியாகராஜருக்கு இசைப் பயிற்சி முடிவு பெற்றது. பெற்றோர்களும் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகை எய்தினர். தியாகராஜரும், அவருடைய சோதரரும், பெற்றோர்கள் வைத்துச் சென்ற ஆஸ்தியைப் பங்கிட்டுக் கொண்டனர். எளிய வாழ்க்கையிலிருந்த தாய் தந்தையர்கள் புதல்வர்களுக்கு ஆஸ்தி அதிகம் வைத்துச் செல்லவில்லை. திருவையாற்றில் திருமஞ்சன வீதியில் ஒரு சிறு வீடும், ராமனது தங்க விக்கிரமும், தியாகராஜர் பங்கிற்கு வந்து சேர்ந்தன. இந்த விக்கிரகத்தைத் தான், தியாகராஜர் இல்லாத சமயம் பார்த்து, அவருடைய சகோதரர் பஞ்சநதம் என்பவர் காவிரிநீர்ப் பெருக்கில் வீசியெறிந்தார். உடன் பிறந்தவர் எனினும் உட்பகையுடையவர். தியாகராஜரது புகழ் அதிகரிக்கவே, அழுக்காறெனும் பாவி பஞ்சநதத்தின் உள்ளத்தில் குடிபுகுந்தது. அழுக்காற்றிற்கு அயலென்றும் உறவென்றும் ஒன்று உளதோ! அழுக்காறு ஒரு பண்பேயெனினும் அதன் கொடிய தன்மையை அறிந்த வள்ளுவர்,

> "அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
> தீயுழி யுய்த்து விடும்."

என்றருளிய குறளில், அழுக்காறு தன்னையுடையவனை இம்மை மறுமைகளிலும் கெடுக்கின்ற கொடுமை

பற்றி அதனைப் "பாவி" என்றுகூறியிருப்பது அறியத் தக்கது.

தியாகராஜரிடம் ஏற்பட்ட அழுக்காறு, அவர் போற்றிவந்த ராமன்மேல் பாய்ந்தது. என்ன செய்வது? ராமனைக் காவிரி நீர்ப் பெருக்கில் மூழ்குவித்ததால் பஞ்சநதம் அடைந்த பயன் ஒன்றுமில்லை. பிறவிக் கடலில் மூழ்கிக் கிடக்கும் ஆன்மாக்களைக் கரையேற்றும் பெருமானாகிய ராமனைக் காவிரி நதி என்செயும்? தியாகராஜர் வீடு திரும்பியதும் விஷயம் அறிந்தார். பெறலருந் திருவாகிய ராம விக்கிரகம் காணுதவராய் ஏங்கினார். அழுதார். ராமாவோ? ராமாவோ? என்று வாய்விட்டரற்றினார். நதியில் வீழ்த்தப்பெற்ற செய்தி யறிந்ததும், நதியருகே ஓடிச் சென்று "ஏ! ராமா! எங்கொளித்தாய்? என்மேல் கருணைகூர்ந்து வாராயோ? முன்பு பிரகலாதாழ்வார் பொருட்டுத் தூணில் ஒளித்திருந்து நீ வெளிப்படவில்லையா? வாலியைக் கொல்லும் பொருட்டு, மராமரமேறில் மறைந்து நின்று அம்புதொடுத்து அவனைக் கொல்லவில்லையா? என்னுள் உறையும் அறுபகைவர்களாகிய காமக் குரோத லோப மோக மதமாற்சரியங்களை அழிக்கும் பொருட்டு ஒளிந்திருக்கின்றாயோ" என்று கூறி, "ஏ, ராமா, உன்னை யெங்கே தேடுவேன்?" என்று வருந்திப் பின்னர் விக்கிரகத்தைக் கண்டுபிடித்தார். களிகொண்டார் கூத்தாடினார். விக்கிரகத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்றார். ஆடினார், பாடினார். ஆனந்தத் தாண்டவம் புரிந்தார். இவை உண்மையன்பு உடையவர்கள் செயல்களல்லவா?

பிரிந்தவர் கூடினால், அவர் தம் அகமகிழ்ச்சியைப் பற்றிப் பேசவும் வேண்டுமோ?


தியாகராஜர், உலகிலுள்ள புலவர்களைப் போலவும், அடியார்களைப் போலவும், வறுமையெனும் நோய்வாய்ப்பட் டிருந்தார். ஆனால் அதற்கென்று மனந்தளர்ந்தாரில்லை. "நல்குரவென்னும் தொல்விடம் பிழைத்தும்" என்னும் அருமைத் திருவாக்கால், வறுமையைப் பொருட்படுத்தாதிருந்தால் தான் ஆண்டவனைத் தியானிக்க முடியுமென்னும் கருத்தை மணி வாசகர் தெரிவிக்கின்றார். தியாகராஜர், பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மயக்கம் பிறப்புக்கு வித்தாகும் என்பதை உணர்ந்தார். அதனை, தியாகப் பிரம்மம் தமது கீர்த்தனை யொன்றில் "ஏ! ராமா உனது சந்நிதி இன்பம் அளிக்கவல்லதா? அல்லது பெரும் பொருள் இன்பமளிக்க வல்லதா?" என்று கேட்பதால் தெளிந்த ஞானமுடையவர் என்பது தெள்ளிதிற் புலனாகின்றது.

"ஓடுங் கவந்தியுமே யுறவென்றிட் டுள்கசிந்து
தேடும்பொருளும் சிவன்கழலே யெனத்தெளிந்து"

என்று வாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளியது போல, நம் ஐயாற்றடிகள் ராமனது திருவடிப் பேற்றையே விரும்பி, ஏனைய உலகியல் இன்பங்களெல்லாம் அழிதன் மாலையன என்றுணர்ந்து ராம பஜனையை வீதிகளில் செய்து கொண்டு அதனால் வரும் பிச்சை அரிசியைக் கொண்டு காலங் கழித்து வந்தார். "ஓடு நமக்குண்டு வற்றாத பாத்திரம்" என்ற

திருவாக்கால் பட்டினத்தடிகள் பக்தர்களுக்கும் சந்நியாசிகளுக்கும் பிச்சை யெடுத்து வாழ்தல் சிறந்தது என்பதைக் குறிப்பாக உணர்த்துகின்றார். செல்வத்தைப் பெரியோர்கள் வெறுத்துத் தள்ளியதால் வெறுக்கை யென்றொரு பேர் அதற்கேற்பட்டது. செல்வம் செருக்கையுண்டு பண்ணும். அவன் கழல் தியானத்திற்கு முட்டுக் கட்டையாகும். ஆகவே அத்தகைய மருட் செல்வத்தை மதியாது அவன்து அருட் செல்வத்தை அடைய வேண்டி உஞ்ச விருத்தி என்னும் பிச்சையேற்றுண்ணலை, தியாகப் பிரம்மம் மேற்கொண்டார். சிலர் இலதை இழிவாகப் பேசினர். உஞ்ச விருத்தி எத்தகையோர்க்கு இழிவு என்பதை உணராத மாக்கள் எள்ளி நகையாடினர். யான் எனதென்னும் செருக்கு நீங்கப் பொருதார்க்கு பிச்சை யேற்றுண்ணல் இழிவே. அகப்பற்று புறப்பற்று என்னும் இருவகைப் பற்றையும் ஒருங்கே நீத்த உத்தமர். பரம் பொருளாகிய ராமனை யே பற்றுகக் கொண்ட பெரியாருக்குப் பிச்சை யேற்றுண்ணல் இழிவாகுமா? இன்றுங்கூட, சில தாசர்கள், சில வேதியர்கள் இறையவனிடம் ஈடு பட்டோர் இவ்வழக்கத்தை மேற்கொண்டொழுகுகின்றனர். இப்படிப்பட்டோர் வீதிகளிலுள்ள வீடுகள் தோறுஞ் சென்று பெரியார்களின் அருட்பாடல்களைப் பாடி மக்களுக்கு ஆனந்தத்தை உண்டு பண்ணுவதோடு உலகம் நிலையாமை, யாக்கை நிலையாமை முதலியவற்றை வற்புறுத்துகின்றார்கள். அம்முறையில் மனித சமூகத்திற்கும் பெருத்ததொரு நன்மை புரிகின்றனர். அதற்குப் பிரதியாக எதிர் பார்ப்பது

பிடியரிசியே தவிர வேறல்ல. ஆகவே தியாகராஜர் கைக்கொண்ட முறை தவறென்று எண்ணுதல் தவறாகும்.



## அக்காலத்தின் சங்கீத நிலை

தியாகராஜர் வாழ்ந்த காலத்தைப் பற்றி அறிவதும் அவசியமானது. இசைவாணர்களை மன்னர்கள் போற்றி வந்த காலம் மறைந்துவிட்டது, மக்கள் போற்றும் காலம் இன்னும் வரவில்லை. இரண்டிற்கும் இடைப் பட்ட காலமாகும். இந்நாள் தியாகராஜர் பிறப்பதற்கு மூன்று வருடங்கட்கு முன்புதான் ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் தொடங்கிற்று. அதன் காரணமாக இந்தியாவில், வியாபார நிமித்தம் புகுந்திருந்த, ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் தமக்குள் போராடினர். மைசூர்ப் போர்களெனப் படுவன நான்கு அப்போது நடை பெற்றன.

தஞ்சாவூர் சம்ஸ்தானத்திலும் குழப்பம் ஏற்பட்டது. தியாகராஜர் பிறப்பதற்கு நெடுங்கால முன்னரே நாயக்கர் ஆட்சி வீழ்ச்சியுற்றது. மராட்டியர் ஆட்சி ஆரம்பமாயிற்று. துக்கோஜி மகாராஜாவின் பிள்ளைகள் காலத்தில் குழப்பம் ஏற்பட்டது. 1781-ல் ஹைதராலி தஞ்சை மீது படையெடுத்தார். 1769-ல் சரபோஜி மகாராஜா தமது ராச்சியத்தை கிழக்கிந்தியக் கம்பெனியார் கையில் ஒப்படைத்தார். அவர் 1832-லும் அவரது மகன் சிவாஜி 1835-லும் காலமாயினர்.

அரசியல் குழப்பங்களால் மைசூர் நாட்டிலும், தஞ்சை வள நாட்டிலும் இசைக் கலை வளர்ச்சியுறாது

மங்க நேரிட்டது. சேர நன்னுடாகிய திருவாங்கூர் சம்ஸ்தானத்தில் மாத்திரம் இக் குழப்பங்கள் ஏற்படவில்லை. ஆகவே இசைப் பயிர் அங்கே தழைத் தோங்கத் தொடங்கியது. தஞ்சை இசைப் புலவர் களும், மைசூர் இசையறிஞரும், சேர நாட்டில் தஞ்சம் புகுந்தனர்.

திருவாங்கூரில், 1729-லிருந்து 1758-வரை ஆட்சி புரிந்த, மார்த்தாண்டவர்மன், 1750-ல், திரு வாங்கூர் நாடு முழுவதையும், ஸ்ரீ பத்மநாப ஸ்வாமிக் குத் தானமாக எழுதிக் கொடுத்து விட்டார். ஆகவே, அன்று தொட்டு, அந்த ராச்சியம் பத்மநாபனுடைய தாயிற்று. அரசர்கள் அவனுடைய பிரதிநிதியாக அரசு வீற்றிருந்து ஆட்சி புரியலாயினர். மார்த் தாண்ட வர்மருக்குப் பின்னர் வந்தோர் ராம வர்மர் என்பார். இவர், 1758-லிருந்து 1798-வரை ஆட்சிபுரிந்தார். இவர் காலத்தில், இசைவாணர்கள் பலர் அங்கே வந்து குழுமினர். ஏனெனின் அவரது மருகராகிய, இளவரசு அசுவதியார் வடமொழிப் புலமையும், இசைப் புலமையும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர். அவரும் அநேக கீர்த்தனைகள் செய் துள்ளார். இன்றும் கோயிலில் அவைகள் பாடப் படுகின்றன. பின்னர் ஆட்சி புரிந்த அவிட்டந் திரு நாள், கௌரிலக்ஷ்மிபாய், இவர்கள் காலத்திலும் இசைவாணர்கள் வந்த வண்ணமாயிருந்தனர். 1829-லிருந்து 1847-வரையில் ஆட்சி புரிந்த சுவாதித் திருநாள் காலத்தில் இன்னும் அநேகர் வந்து சேர்ந்தனர். இம் மன்னர் இசையில் சிறந்தவர். ஆகவே இசையினுக்கு மிகுந்த சலுகை காட்டினர்.

இசைவாணரை இன்முகத்துடன் வரவேற்று அவருக்குப் பொன்னும் பொருளும் ஈந்து போற்றினர். இவர் காலத்தில் இசைத் தேவி இசையுடன் விளங்கினாள்.



# 5

## மன்னர்களின் அழைப்பும் தியாகரது மறுப்பும்

தியாகப் பிரம்மம் உண்மைப் பொருள் இன்னதென்றுணர்ந்தார். அதை உறுதியாகக் கொண்டார். உலகில் ஏனைய பொருள்களெல்லாம் பொருளல்லவென்றுணர்ந்தார்.

"வைத்த நிதி பெண்டிர் மக்கள்குணங் கல்வி என்னும்
பித்த உலகிற் பிறப்போ டிறப் பென்னுஞ்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்று மணிவாசகனார் திருவாய் மலர்ந்தருளியிருப்பதைப்போல், உலகில் காப்பாற்றி வைத்துள்ள நிதி, பெண்டிர், பிள்ளைகள், உயர் குலம் இழிகுலம், கல்வி, என்று பிதற்றித்திரிகின்ற பித்தர் நிறைந்தது இவ்வுலகமென்றும், இதில் பிறப்பதும் மனோ விகாரமேயன்றி வேறல்ல என்பதும் ஞானமாகும். தியாகர் இத்தகைய ஞானம் கைவரப் பெற்றவர். இறைவனைத் தம் மனத்துள் இருத்திக் கொண்டார். திருவள்ளுவரும் மோக்ஷசாதனையைக் கூறுங்கால்

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றை
பற்றுக பற்று விடற்கு"

என்று கூறுகின்றார்.

உலகில் யாதொரு பற்றும் அற்றவன் ஆண்டவன். அவன்பால் அன்பு செலுத்தி அவனை மனத்தே

இருத்திக் கொண்டால், அம்மார்க்கத்தால் வீட்டினை யடையத் தடையாக விருக்கும் உலகப்பற்றினை யொழிக்க முடியும் என்கிறார். இச்சீரிய ஞானங் கைவரப் பெற்றார் உலகிலுள்ள அரசர்களைத் துரும் பென மதிக்கின்றனர்.

துறவிக்கு வேந்தன் துரும்பு என்ற முதுமொழிப் படி நம் பெரியார்கள் அரசர்களை மதித்தார்களில்லை. திருநாவுக்கரசர் சமணமதத்திலிருந்து மீண்டுஞ் சைவ மதத்திற்கு வந்தபோது நாவுக்கரையரை யழைத்து வருமாறு ஏவலாளர்களைப் பல்லவ அரசன் அனுப்பியிருந்தான். அவர்கள் அடிகளை நெருங்கித் தங்கள் அரசனைக் கூப்பிட்டு வருமாறு பணித்துளான் என்பதைத் தெரிவித்தபோது, "நாமார்க்கும் குடியல் லோம் நமனை யஞ்சோம்" என்னும் மறுமாற்றத் திருத்தாண்டகத்தைப் பாடி அவருடன் செல்ல மறுத்தார். பிறகு அவ்வேவலாளர்கள் அவரைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதின் பேரில் அவர் களிடம் இரக்கங்காட்டிச் சென்றாரேயன்றி பல்ல வனது ஆணைக்குப் பயந்து சென்றாரல்ல. உலகத்தைப் படைத்துக் காத்தழிக்கும் உத்தமன் — பகவான் அவனையே பரம பிதாவாகவும் வேந்தனாகவும் கருதி யஞ்சுவார்களே தவிர இன்றிருந்து நாளை மாயும் எம்போலியர்க்கு இவர்கள் அஞ்சார்.

ஒரு முறை தஞ்சை மன்னர் சரபோஜி மகா ராஜா தியாகராஜரைப் பார்த்து அவரால் தாம் பாடப் பெற விரும்பி, தமது விருப்பத்தை நிறை வேற்றினால் தியாகருக்குப் பத்து வேலி நிலமும்

நிறையப் பொன்னும் இனுமாக வழங்குவதாகவும் சொல்லி அவரிடமும் ஆள்விடுத்தார். தியாகரிடம் தஞ்சையினின்றும் ஆள்வந்து சேர்ந்து அரசர்மேல் பாடல்கள் பாட வேண்டுமென்பதையறிந்த இசை மன்னர் வந்த தூதரைப் பார்த்து, "உங்களரசர் ஏன் செல்வத்தை இவ்விதம் சிறு விஷயங்களில் செலவு செய்து வீண் செய்ய வேண்டும்? நான் மன்னர்களைப் புகழ்ந்து இசைத் தேவிக்கு இழுக்கு உண்டாக்கமாட்டேன்" என்று கூறினார். தூதர் பொன்னைப் பற்றிக்கூறவே, மண், பெண் பொன் என்ற மூவாசைகளையும் வெறுத்தவராதலால் அவர் "எனக்குப் பொன் தேவையில்லை. தங்கத்தின் பொருட்டு எனக்கு ஆசையேற்பட்டிருக்கு மேல் எனது ராமலிங்க விக்கிரகத்தினையே யுருக்கிப் பண மாகச் செய்திருப்பேன். ராமனுடைய சந்நிதியில் அவனை வணங்குவது இன்பத்தை யளிக்கின்றதா? பொருட் செல்வம் இன்பத்தை யளிக்கின்றதா? ஏ! ஆன்மாவே! எனக்கு உண்மையைக் கூறு. பால், வெண்ணை, மோர் - இவைகள் இன்பப் பொருள் களா? ராமனது பஜனையாகும் அமிர்தம் இன்பப் பொருளா? மனவமைதியாகிய கங்கையில் மூழ்குவது விசேடமா? மண்ணிறைந்த உலகாசையாகிய சேறுள்ள கிணற்றில் மூழ்குவது விசேடமா? செருக் குற்ற மனிதனைப் பாடுவது நல்லதா? சர்வ சக்தி வாய்ந்த தெய்வத்தைப் புகழ்வது நல்லதா?" என்னுங் கருத்தடங்கிய 'நிதி சாலசுகமா' என்ற கீர்த்தனை யைப் பாடினார். இதைக் கேட்டதும் தூதர் அவ்

விடத்தை விடுத்துக் கடிந்து சென்று தஞ்சையை அடைந்து நிகழ்ந்ததைத் தெரிவித்தார்.

இஃதிவ்வாறாக, மற்றொரு நிகழ்ச்சி குறிப்பிடத் தக்கது. திருவாங்கூரில் இசைத்தேவி நடனமிடுகிறாள் என்பது முன்னரே அறிந்த விஷயம். அங்கே ஆட்சிபுரிந்த சுவாதித் திருநாள் (திருநாள், என்பது: அந்நாட்டில் அரசர்கள் பிறந்த நக்ஷத்திரத்தையே தமக்குப் பெயராகச் சூடிக் கொள்ளும் வழக்கமுண்டு. சுவாதி நக்ஷத்திரத்தில் பிறந்தவர், சுவாதித் திருநாள் என்று வைத்துக் கொண்டார்) இவர் நல்ல இசைப் பயிற்சியுடையவர். அநேகம் கீர்த்தனைகள் இயற்றியுள்ளார். அவருடைய சோதரி உருக்குமணிபாய் (1809—1837) ஓர் அபூர்வ கவிதா சக்தி வாய்ந்தவர். பல கீர்த்தனைகள் இயற்றியுள்ளார். திவான் சுப்பராவும் சங்கீத வித்துவான் கோவிந்த மாறர், வடிவேல், சிவானந்தர், சின்னையா, பொன்னையா, இரவி வருமன் தம்பி, க்ஷீராப்தி சாஸ்திரி, பரமேஸ்வர பாகவதர், மேருஸ்வாமி முதலிய பல இசைவாணர்கள், இசை மன்னர் சுவாதித் திருநாளைச் சுற்றிலும் வீற்றிருந்தனர். அருங்கலை விநோதராகிய மன்னர் இசைக் கடலில் மூழ்கி இன்பம் திளைத்து வந்தார். இவ்வாறு இசையின்பம் பருகிக் கொண்டிருந்த இசை மன்னரை, ஒருநாள், தியாகராஜரது மாணவர்களில் ஒருவர் கண்ணையா பாகவதர் என்பவர், அந்நகர் சென்றிருந்தபோது, பேட்டிகண்டு, தியாகரது கீர்த்தனைகளில் சிலவற்றை மிக அழகாகப் பாடிக் காட்டினார். இசையின் நுணுக்கமெல்லாம் நன்குணர்ந்த மன்னர். இசையால் நன்றாகத் தோட்கப்

பட்ட இருசெவிகளுடைய வேந்து ஓட்டைச் செவி யுடையவரல்ல. ஆகவே அளவற்ற மகிழ்வெய்தினர். திருவாங்கூர் இசையினுக்கும், தியாகரது கீர்த்தனை களுக்கும் உள்ள வேறு பாடு உணர்ந்தார்.

காகங் கரைதலுக்கும், குயில் கூவுவுதற்கு முள்ள வேறுபாடு அவருக்குத் தோன்றிற்று. தியாகரைத் தரிசித்து அவரது கீர்த்தனைகளை அவரிடத்து நேரில் கேட்டுமகிழ எண்ணினர். உடனே வடிவேல் என்னும் இசைவாணரை யழைத்து "நீர் திருவை யாறுசென்று எப்படியாவது தியாகராஜரையழைத்து வரல்வேண்டும்" என்று கூறி வழிச் செலவுக்கு வேண்டிய பொருளும் ஈந்தனுப்பினர். இக்காலத் தைப்போல அக்காலத்தில் திருவாங்கூருக்கும் திருவையாற்றுக்கும் போக்கு வரத்துச் சாதன மொன்றும் இல்லை. வடிவேல் ஐயாறடைவதற்குப் பல வாரங்கள் ஆயின. பல தொல்லைகள் வழியில் அனுபவிக்க நேர்ந்தது. வழியில் பல இடங்களில் உணவு வசதியில்லாமல் பட்டினி கிடந்து கடைசி யாகத் திருவையாற்றை வந்து சேர்ந்து தியாகப் பிரம்மத்தையும் தரிசித்தார். வடிவேல் வந்தவுட னேயே, தாம் வந்த காரியத்தைத் தெரிவிக்கத் தயங் கினர். ஏனென்றல் சரபோஜி மன்னரின் அழைப்பை, தியாகராஜர் நிராகரித்ததை, வடிவேல் கேள்வியுற் றிருந்தார். தமக்கும் அப்படிப்பட்ட மறுமொழி கிடைக்குமோ வென்றஞ்சி சில நாட்கள் வாளா இருந்தார். ஒரு நாள் தியாகராஜருடன் அவகாச மாகப் பேசும் வாய்ப்பு வடிவேலுக்குக் கிட்டிற்று. அவ்வாய்ப்பை நழுவவிடாமல் திருவாங்கூர் சம்ஸ்

தானத்தின் பொருட் செல்வத்தையும், அம்மன்னர்கள் போற்றி வளர்த்துவரும் இசைச் செல்வத்தையும், இசைவாணர்கள் அடைந்துவரும் நன்மையையும் எடுத்து விரிவாகக் கூறி தியாகராஜரை, திருவாங்கூருக்கு அவசியம் தம்முடன் வருமாறு வடிவேல் மிக வினயமாய் வேண்டிக்கொண்டார். தியாகராஜர் திருவாங்கூர் போக மறுத்தார். வடிவேல் தியாகரைப் பார்த்து, "ஐயா, தாங்கள் திருவாங்கூர் வந்தால் தங்களுக்குக் கீர்த்தி மிகுதியாக ஏற்படும்" என்ருர். அதற்குத் தியாகர் "மக்களின் பாராட்டுத்தானே புகழாகும். எதைப் புகழ வேண்டும். எதை யிகழவேண்டுமென்றறியாத மக்களின் புகழ்ச்சியால் யான் அடையும் பயன் யாது?" என்ருர்.

வடிவேல்:—மக்களின் புகழ்ச்சியை விரும்பாவிடினும், அங்குள்ள மன்னர் தங்கள் வரவை எதிர் பார்த்துளார். மன்னர் பிரான் தங்கள் பதவியை உயர்த்துவார்."

தியாகர்:—பதவியென்ருல் என்ன? பொருள் சற்றுச்சொல்லுங்கள்.

வடிவேல்:—"பதவியென்ருல் உயர் நிலையாகும். அரசாங்கத்தில் அரசரே தங்களைப் பாராட்டும் நண்பராகி விட்டால், தங்கள் பொருளாதார நிலை உயரும். எம்போன்ற பல வித்துவான்கள் தங்களின் கீழ் அடங்கி வாழ்வோம். தங்கள் கடைக்கண் நோக்கால் மக்கட்குப் பல நன்மைகள் செய்யலாம். நாவசைத்தால் நாடசையும். குன்றத்தனைய செல்வம்

தங்களில்லத்தில் குவிந்து கிடக்கும். தாங்களும், தங்களில்லக் கிழத்தியும, குழந்தையும், செல்வத்தில் மூழ்கி இன்பம் நுகரலாம். இதைவிட வேறு பதவி என்னவேண்டும்? யோசிக்கவேண்டாம். உடனே புறப்படுங்கள்'' என்றார்.

வடிவேல் பேசிய பேச்சால், தியாகர் மனம் சிறிதும் வேறுபடாமல், ''நீங்கள் முதலில் புகழைப் பற்றிப் பேசினீர்கள். பின்னர் பொருட் செல்வத்தைப் பற்றிக் கூறினீர்கள். பொருட் செல்வம் மனிதனது ஆன்ம முன்னேற்றத்தைத் தடைப் படுத்தக் கூடியது. அதனால், கண்ணன் ''யாரிடத்தில் அதிகப் பிரீதி காட்டுகின்றேனே அவரிடமுள்ள செல்வத்தை எடுத்துக்கொண்டு விடுகின்றேன்'' என்று கூறி யுள்ளார். அதிகச் செல்வம் ஒருவரை உலோபியாகச் செய்யுமே தவிர உதாரகுணமுள்ளவனாகச் செய்யாது. அறிவிலார் அதைச் சேகரிக்க அல்லும் பகலும் இடைவிடாது முயல்வார்கள். அறிவுள்ளவர்கள், தமது ஆன்ம வளர்ச்சிக்கும், ஆண்டவனை யடைவதற்கும், பொருட்செல்வத்தை ஓர் தடையாகக் கருதுவார்கள். பதவியைப்பற்றி யான் பாடியுள்ள ''பதவி நீ சத்பக்தி'' என்னும் கீர்த்தனையைப் பாடுகின்றேன். கேட்பாயாக: உண்மைப் பதவியின் பொருளை உணருவாயாக'' என்று பாடினார்.

''ராமனிடம் முழு நம்பிக்கை வைத்தலே உண்மையான பதவியாகும். அநேகர் வேதங்களையும், சாஸ்திரங்களையும், உபநிடதங்களையும், கிளிபோல், நெட்டுருச் செய்து ஒப்பிக்கின்றனர். அத்தகை

யோர் பதவியை அடைந்துவிட்டதாகக் கருதப்படு வார்களா? இன்னும் அநேகர் பல தாரங்களையும், பல மக்களையும், நிறைந்த செல்வத்தையும், மாண்பு மிக்க மன்னர்களின் உறவையும் உடையவர்களா யிருக்கின்றனர். அவர்கள் பதவி பெற்றவர்களெனக் கருதப்படுவார்களா? ஒருவன் அஞ்ஞானத்தில் ஆழ்ந்து, தீயொழுக்கத்தால் இன்பம் நுகருவதாகக் கொள்வோம். அவன் பதவி பெற்றவனா? எவ ருடைய மனம் ராமனிடம் இடைவிடாத பக்தி செலுத்துகின்றதோ அவரே பதவியடைந்தவராகக் கருதப்படுவார்'' என்ற சீரிய கருத்துக்களடங்கிய கீர்த்தனையைப் பாடக் கேட்டதும் வடிவேல் வந்த வழி பார்த்துக்கொண்டு விரைந்து திருவாங்கூர் மீண்டார்.

தியாகரது மனோநிலை அத்தகையது. உலகம் அவருக்குத் துன்பம் நிறைந்ததாகக் காணப்பெற்றது.

> "வேண்டுங்கால வேண்டும் பிறவாமை மற்றது
> வேண்டாமை வேண்ட வரும்"

என்றார் திருவள்ளுவர். இறைவனிடம் பிரார்த்தனை செய்யுங்கால் அற்ப சுக போகங்களைக் கொடுக்குமாறு வேண்டாமல் பிறவாதிருக்க வரந்தர வேண்டும் என்கிறார். காரைக்காலம்மையார் கைலைசென்ற போது இறைவன் அம்மையார்க்கு என்ன வேண்டு மென்று கேட்டபோது அம்மையார்

> "இறவாத இன்பம் வேண்டிப்
> பின்வேண்டு கின்றார்

பிறவாமை வேண்டும்
மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமைவேண்டுமே இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

என்று பிறவாமையே வேண்டுகின்றார். பிறப்புண்டேல் இறைவனை மறவா மனம் வேண்டுகின்றார்.

இம்மாதிரியே தியாகராஜரும் ராமபக்தியில் ஈடுபட்டு இகலோக வாழ்க்கையை வெறுத்தொதுக்கி பிறப்பறுத்துக் கொள்ள முயன்றாரே தவிர, மன்னர்களின் மதிப்பையும், அவர்தம் செல்வத்தையும் மிக அற்பமாக மதித்தார். ஆகவே வடிவேல் அழைப்பிற்கு இணங்கவில்லை. உலகினர் பாராட்டுதலையையும் ஒரு பொருட்டாக மதித்தாரில்லை. இறைவனைப் பற்றிய கீர்த்தனைகள் இறைவனுக்குப் பிரீதியாக இருந்தாற்போதுமென்று எண்ணினார்.



## 6

### தோற்றமும் குணதிசயங்களும்

தியாகராஜர் மிகவுயரமாயும் மெல்லிய மேனி உடையராயும் விளங்கினர். அகன்ற தோள்களும், ஆழ்ந்த கருத்தைத் தெரிவிக்கும் முகமும், அகன்ற மார்பும் அவைகட்குப் பொருந்த, கைகால்களும் வாய்க்கப் பெற்றிருந்தார். கழுத்தில் துளசிமாலையும் நெற்றியில் கோபிநாமமும், இடதுகையில் சிப்ளாக் கட்டையும், வலதுகையில் ஜபமாலையும், ஆட்காட்டி விரலில் தங்கமோதிரமும் மோதிரவிரலில் பவித் திரமும் அணிந்திருந்தார். தலையில் பட்டுக் கலந்த வஸ்திரத்தால் தலைப்பாகை தரித்திருந்தார். இவரது தோற்றம் எளிய வாழ்வும் உயர்ந்த எண்ணமும், என்பதை உலகிற்கு மெல்லென மௌன மாய்த் தெரிவிப்பதுபோல் தோன்றிற்று. "தந்தை யறிவு மகனறிவு' என்றதற்கிணங்க தியாகப்பிரம்மம், தன் தந்தையின் நற்பண்புகள் எல்லாம் தமதாகச் செய்து கொண்டார். தெய்வபக்தி, உறுதி, மனத் திருப்தி—முதலிய நற்பண்புகள் வாய்க்கப்பெற்றிருந் தார். தமமுடைய மனைவியிடத்தும், தம் ஒரே மகளிடத்தும் மிகுந்த அன்பு காட்டிவந்தார். அவர் பெயர் பூண்ட பேரன் ஒருவன் இளம் பிராயத்தே இறந்து விட்டான்.

தியாகராஜருக்கு முன்கோபம் அதிகம். சீடர்க ளிடம் இம் முன்கோபம் பாய்ந்து அவர்கட்கு மனப்புண் உண்டாக்கும். அக்காலத்தில் குருவிடம்

சீடர்கள் சென்று அவருடன் தங்கி, அவருக்கு வேண்டிய பணிவிடை புரிந்து பாடம் படிப்பதுண்டு. அதே பிரகாரம் பலர் தியாகரிடம் சீடர்களா யிருந்தனர். அவர்களில் ஒருவர் சற்று மந்தபுத்தி உடையவர்; பூசைக்குரிய பாத்திரங்களையோ, சாமான் களையோ, அவர் கொணருவதில் சற்றுத் தாமதமாகி விட்டால், தியாகராஜர் அவரை நன்றாக வைவதுடன் புடைத்துவிடுவர். இந்தச் சீடர் வெகுகாலம் இவரிடம் இராமல் போய்விட்டார்.

கூர்ந்தறிவுள்ள சீடர்கள், தில்லைஸ்தானம் ராமையங்கார் போன்றவர்கள் பலர் இவரிடம் இசைப் பயிற்சி பெற்று பெரிய சங்கீத வித்துவான்களாகப் பிற்காலத்தில் விளங்கினார்கள். தியாகராஜருடைய சீடர்கள் என்றால் ஒருதனி மதிப்புண்டு. இந்தக்கூர்ந்த மதியுடைய சீடர்கள் தம்முடைய குருவின் ஆணை யின்றி அயலூர் சென்று அங்கு நடந்த நடனமாதிட மிருந்து ஒரு பாடலையுமறிந்து வந்திருந்தார்கள். அப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தனர். தியாகராஜர் அப்பாடலைக் கேட்டு மிகக் கோபித்து, தன்னாணை யின்றிச் சென்று நடனத்தைப் பார்த்து, காமரசம் பொருந்திய பாடலைக் கற்றுவந்தது பெருந்தவறென்று கூறி, அவர்களை வீட்டினின்றும் துரத்திவிட்டார். காலை ஆகாரத்தை இழந்தார்கள் சீடர்கள். நண்பகற் போசனத்தையும் இழந்திருப்பார்கள். அங்கனம் நேராதவாறு குரு பத்தினியார் குருவுக்கு சாந்தோப தேசம் புரிய ஆரம்பித்தார்.

குருபத்தினி:—குரு தேவருக்கு இரக்கமும் அன்பும் முக்கியமான குணங்களல்லவா?

குரு:—சீடர்களைத் திருத்துவது இரக்கமல்லவா?

குருபத்தினி:—கோபத்துடன் சீடர்களைத் திருத்த வேண்டுமா?

குரு:—ரோஜா மலருடன் முட்களும் வளர வில்லையா?

குருபத்தினி:—மக்கள் ரோஜா மலரைப் பறித்துக்கொண்டு முட்களை எடுத்தெறிந்துவிட வில்லையா?


குரு:—"என்னருமை மனைவியே! நீ உண்மை யாகவே என்னைத் திருத்தி விட்டாய். யார் உண்மை யாக நேசிக்கின்றனரோ அவரே கடிந்து இடித்துப் புத்தி புகட்டுவார் என்பது உண்மை. ஐம்புலன்களை யும் ஒருவர் வெல்லலாம். வேதாந்தத்தில் நிபுணராக விளங்கலாம். மனைவி, மக்கள், செல்வம், உடையராக விருக்கலாம். ஜபதபங்கள் உள்ளவராயிருக்கலாம். அநேக யாகங்கள் புரிந்திருக்கலாம். மற்றவர் எண் ணங்களறிந்து கூறும் மாண்புடையராயிருக்கலாம். பரம பாகவதர் எனப் புகழ் பெறலாம். ஆனால் மன வமைதி—மனச்சாந்தி பெருவிடில், முன் கோபக் காரராயிருந்தால் அவருக்கு மகிழ்ச்சி ஒரு போதும் ஏற்படாது. ஆகவே, சாந்தியின்றேல் சந்தோஷ மில்லை" என்று கூறினர். இந்த எண்ணம் உண்டான போது "சாந்தமுலேகா சௌக்யமு லேது" என்ற கீர்த்தனையைப் பாடினர். அவரது வாழ்வில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்ட காலமாகும். வெகுளியை வென்ற காலமாகும்.

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப் பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு' என்ற வள்ளுவர் வாக்கிற் கிணங்க, தம்முடைய மனைவியின் வாக்கில் உயர்ந்த உண்மையைக் கண்டார். அதைக் கடைப் பிடித்தார். அவ்வளவு காலம் கடத்தற்கரிதா யிருந்த கடுங்கோபத்தைக் கடந்தார். பேதைமைத் தன்மை வாய்ந்த மனைவியின் வார்த்தையென்று அவமதிக்கவில்லை. உண்மை கண்டவிடத்து உத்தமர் தலையால் வணங்கி அதை யேற்றுக் கொள்வார். அது அவரது பெருமையைக் காட்டுகின்றது.

தியாகராஜர் சிறந்த ஓர் ஆசிரியர். சீடர்களின் நிலையறிந்து போதிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். மிகுந்த மந்த புத்தியுள்ளவர்களாயிருந்தாலும், அவர்கட்கு தக்கவாறு போதித்து, அவர்களையும் சிறந்த வித்து வான்களாகச் செய்வார். ஆசிரியர்களது பெருமை யெல்லாம் மந்தபுத்தியுள்ளவர்களையும் சிறந்த அறி வுள்ளவர்களாகுமாறு கற்பிப்பதில்தான் அடங்கி யிருக்கின்றது. கூறிய மதியுடையாருக்குப் போதிப் பதில் கஷ்டமில்லை. ஆனால் மந்தர்களுக்குப் போதிப் பதே சாமர்த்தியம். தியாகர் பலர்க்குப் பாடல்கள் கற்பித்ததன் பயனாக, பல சங்கீத வித்து வான்கள் ஏற்பட்டனர். வாழையடி வாழையாக பலர் அவ்வப்போது தோன்றிச் சங்கீத வுலகத்தை அலங்கரிக்கின்றனர். தமிழ் நாட்டிலும், கருநாடக நாட்டிலும், தமிழர் குடியேறியுள்ள ஏனைய நாடு களிலும், தியாகரது கீர்த்தனைகள் பாடப் பெறு கின்றன. சங்கீதம் பயில்கின்றவர்கட்கும், அவர் கீர்த்தனைகள் பயிற்றப்படுகின்றன. கருநாடக சங்

கீதம் இன்றுகாறும் எங்கனும் பரவி, ராமனது புகழமிழ்தை மக்கள் பருகுவதற்குக் காரணரா யிருந்தவர் நமது தியாகராஜராகும். அன்னார்க்குப் பொதுவாக மக்கட் சமூகமும், சிறப்பாகச் சங்கீத வுலகமும், மிகவும் கடப்பாடுடையதாயிருக்கின்றது.

தியாகராஜர் அன்று தமிழ் நாட்டில் தோன்றியிரா விட்டால் இன்று ஆயிரக்கணக்கான மக்கள் குழுமிக் கேட்டு மகிழும் இசையரங்குகள் எங்கே? தியாகராஜரது தாய் மொழி தெலுங் காதலால் அவர் தெலுங்கிலேயே கீர்த்தனைகள் இயற் றினார். ஆகவே வித்துவான்கள் யாவரும் தெலுங்குக் கீர்த்தனைகளையே பாடுகின்றனர். தெலுங்குக் கீர்த் தனைகளுடன் தமிழ்க் கீர்த்தனைகளையும் சேர்த்துப் பாடவேண்டுமென்று தமிழ் மக்கள் கேட்டுக்கொள்வ தால் இந்நாளில் வித்துவான்கள் யாவரும் இசை யரங்குகளில் தமிழிசையும் பாடி வருகின்றனர்.



# 7

## சில நிகழ்ச்சிகள்

தியாகராஜரது வாழ்க்கையில் அற்புத நிகழ்ச்சிகள் பல நம் கவனத்தை ஈர்க்கின்றன. அவைகளில் சிலவற்றை அறிந்து கொள்வோம்.

ராமபக்தியில் ஈடுபட்டவர் இவர். மறந்தும் புறந்தொழாதவராயிருந்தார். "ராமனே உலகில் பரம்பொருள். ராமனுக்குச் சமமான தெய்வமே இல்லை. பரத்துவம் ராமனுக்கே உண்டு. மற்றத் தெய்வங்களெல்லாம் சிறு தெய்வங்கள்" என்று எண்ணி வந்தார் தியாகராஜர்.

இத்தகைய எண்ணங்கள் சாதாரணமாக, பக்தர் யாவருக்கும் உண்டாவன இயல்பே. சிவனடியாரைப் பார்த்தால், அவரும் அப்படியே எண்ணுவார். "சைவ சமயமே சமயம்" என்றும் "சிவனே பரம்பொருள்" என்றும் சிவனடியார் கூறுவார். இதனுல் குற்றமில்லை. கற்புடைய காதலி தன் கொழுநனையே தெய்வமெனக் கருதுவது குற்றமாகுமா? அது போலவே ஒரே தெய்வத்திடம் உறுதியான நம்பிக்கை வைப்பதிலும் குற்றமில்லை. 'ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்' என்பது திருமூலர் வாக்கு. ஒரு தெய்வத்தைப் பல பெயரிட்டழைக்கின்றனர். மக்கள் எப்பெயரிட்டழைத்தாலும் எத் தெய்வத்தை வணங்கினுலும், அந்தப் பரம்பொருளொன்றையே குறித்து, அதற்கே அவ்வழி பாடும் போய்ச் சேருகின்றது.

ஆதலால், பிறமத வெறுப்போ, பிறதெய்வ வெறுப்போ, பெரும் பாவமாகும். ஆரம்பத்தில் தியாகராஜர் ராமனைத் தவிர வேற்றுத் தெய்வங்களைக் கண்ணெடுத்தும் பார்த்ததில்லை. திருவையாறு ஒரு சிறந்த சிவத்தலமென்பதும், தென்கைலையென்று சைவரால் போற்றப்படுவதென்பதும், யாவரும் அறிந்ததே. சைவசமயாசாரியர்களில் ஒருவராகிய திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு, கைலையின் காட்சி கிடைத்த இடம் அது. அதனாலேயே அந்த க்ஷேத்திரத்தைத் தென்கைலாசம் என்று கூறுகின்றனர். திருவையாற்றில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பெருமானது திருநாமம் ஐயாறப்பர். (பஞ்சநதேசுவரர்) என்பது. தேவியின் திருப்பெயர் அறம் வளர்த்த நாயகியார். உலகமாதாவாகிய பார்வதி தேவியார், வீதி வலம் வரும்போது அறம் வளர்த்த நாயகியாரைப் பார்க்க விருப்பமின்றி தியாகராஜர் வீட்டிற்குள் ஓடியொளிந்து ராம விக்கிரகத்தைப் பார்த்த வண்ணம் "லாவண்ய ராமா" என்னுங் கீர்த்தனையைப் பாடினாராம். அக்கீர்த்தனையில் அறம் வளர்த்த செல்வியாகிய பார்வதியம்மையாரை அஞ்ஞானக் கடவுளர் கூட்டத்தைச் சார்ந்தவராகப் பாடினார்.

சில ஆண்டுகட்குப் பின் தியாகராஜர் நோய் வாய்ப்பட்டார். தமது கனவிலே வழக்கம்போல ராமனைக் காணவில்லை. அவர் மனம் நொந்தது. அறம் வளர்த்த நாயகியாரை இகழ்ந்த குற்றத்தால், அம்மை, சீற்றம் உற்றிருக்கலாமென்றும், அதன் பயனாகத் தமக்கு நோய் உண்டாயிற்றென்றும்

எண்ணினர். உடனே அம்மையாரிடம் தியாகர், தாம் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுமாறு பிரார்த்தித்தார்.

"கருணஜூடவம்மா" என்னும் கீர்த்தனையால் தேவியைப் பார்த்து, "சந்திரகலாதரனது தேவியே! ஐயாறமர்ந்த நிகரிலாத் தெய்வமே! அறம் வளர்த்த நாயகியே! அடியேனைக் கடைக்கண் பார். அஞ்ஞானத்தால் செருக்குற்றுச் சிறு மனிதர் புரியுங் குற்றத்தை மன்னித்துக் காப்பாற்றவேண்டும். ஏழையேன் பண்டிகழ்ந்தது, பண்பன்று. இப்பொழுது தான் ராமனுக்கும், சிவபிரானுக்கும், உனக்கும் வேறுபாடின்மையை அறிந்தேன். எளியேனைக் கைவிடாதே" என்று மனமுருகிப் பாடினர்.

ஐயாறப்பர் எனப்பெறும் சிவபெருமான்மீதும் மனங்கசிந்து பாடினர். கருணையங் கடலாகிய அறம் வளர்த்த நாயகியும், அப்பரும், தியாகரது கழிவிரக்கத்திற்கு இரங்கியருள்புரிந்தார். இறைவன் எல்லையில்லாத கருணை வாய்ந்தவனாதலால், மக்கள் அஞ்ஞானத்தால் புரியும் குற்றங்களை மன்னித்தருளுகின்றார். தியாகராஜரது வாழ்க்கையில் இத்தகைய பரந்த நோக்கம் ஏற்பட்ட பிறகு விநாயகரைக் குறித்தும், முருகனைக் குறித்தும், சிவபிரானைக் குறித்தும், கீர்த்தனைகள் இயற்றினர்.

## 8

### யாத்திரைகள்

தியாகராஜர் தென்னாட்டிலுள்ள முக்கிய ஸ்தலங்கட்கு யாத்திரை செய்ய விரும்பினார். பேட்டையிலுள்ள மாணவரொருவர் அழைப்பின் பேரில், முதலில் அவ்வூருக்குச் சென்று அங்கிருந்து, திருப்பதி சென்று, அங்கே கோயில்கொண்டெழுந்தருளியுள்ள வேங்கடேசப் பெருமானைத் தரிசிக்கச் சென்றார். அங்கே பெருமாள் முன்னர் ஒரு திரை, தொங்கிக் கொண்டிருந்ததைக் கண்டார், தியாகராஜர் பெருமானைத் தரிசிப்பதற்கு இத்திரை இடையூறாக விருப்பதை யுணர்ந்து, "தெரதீயகரஹா" என்னும் கீர்த்தனையைப் பாடியருளினார். உடனே திரை, விலகியது. பெருமானைக் கண்ணாரக் கண்டு வணங்கி மகிழ்ந்தார்.

அங்கிருந்து பூந்தமல்லிக்கு அருகேயுள்ள கோவூர் சென்றார். இவ்வூரில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது மூன்று கீர்த்தனைகள் பாடிவணங்கினார். அவ்வூரில் சுந்தரேச முதலியார் என்பவர் சிறந்த தமிழ்ப்புலவர். சங்கீதாபிமானி. தியாகராஜரைத் தக்க கௌரவத்துடன் வரவேற்று உபசரித்தார். ஆனால் தியாகராஜர், முதலியாரின் முகக்குறிப்பை உணர்ந்தார். அவர் ஏதோ மனக்குறையுடன் இருப்பதாக அறிந்து முதலியாரைப் பார்த்து "முதலியாரே நீர் ஏன் சற்று முகக்கவலையோடு இருக்கிறீர் ?" என்றார்.

"ஐயா, தங்களைச் சிறந்த முறையில் வரவேற்க வேறிடத்தில் ஏற்பாடு செய்திருந்தேன். அது முடியாது போயிற்று. ஆகவே மனம் வருந்து கின்றேன்" என்றார்.

தியாகராஜர்:—நான் அரசனல்ல. அரசனைச் சேர்ந்தவனும் அல்லன்; சாதாரண மனிதன், பாத சாரியான யாத்திரிகன், பிச்சைக்காரன், பொருள் விரும்பும் பிச்சைக்காரனல்ல; மோக்ஷத்தை விரும்பும் பிச்சைக்காரன். எனக்கு ஏன், ஆடம்பரமான வர வேற்பு?

முதலியார்:—ஐயா நமது நாட்டில் ஒவ்வொரு வரையும், அவரவர் தகுதிக்கேற்ப, மக்கள் பாராட்ட வேண்டியது அவசியம் என்று நான் கருது கின்றேன். தங்களைப் போன்ற சிறந்த பாகவதர்கள் மன்னர்களைக் காட்டினுஞ் சிறந்த மாண்புடைய வர்கள். நாட்டிற்கு நன்மையையே புரியத்தக்க வர்கள். ஒரு நாட்டில் தங்களைப் போன்ற சக்தி வாய்ந்த அன்புள்ள குருமார்கள் இருப்பார்களே யாயின், அந்நாட்டை, யார் வேண்டுமானாலும் ஆளலாம். அரசர்கள் தோன்றுவார்கள், மக்கள் முயன்றால், ஆனால் தங்கள் போன்றவர்களை தோற்று விக்க யாராலும் முடியாது. தங்களுடைய கீர்த் தனைகள் இரண்டிற்கும் பயன்படுவதால் மிகவும் சிறந்தனவாகும். என் முன்னோர்கள், 'தங்களைப் போன்ற குருமார்கள், பிறர்க்குபதேசிக்கும் வண்ணமே நடந்து காட்டுகின்றவர்கள். மன்னர் களைக் காட்டிலும் மாண்புடையவர்கள் என்று

எனக்குக் கூறியுள்ளார்கள். ஆகவே தங்கட்குத் தக்க வரவேற்பளிக்க எண்ணியிருந்தேன். "ஒன்றை நினைக்க அது ஒழிந்திட்டொன்றாகும்" என்பது போலாயிற்று என்று மேலும் கூறினார்;

"பாரோர் பலரைச் சபைகூட்டி
நாளும் பஜனைசெய்தும்
பேராகிய பிள்ளையார் பிடிக்கக்
குரங்கானது போல்
சீராமா! செயல் வேறுபட்ட
இத் தீங்கினையான்
ஆரோடு சொல்லுவேன்! கோபால!
நீயருள்வாய் சிறிதே"

என்று பாடி முடித்தார்.

தியாகராஜரை அங்குள்ளவர்கள் பாடுமாறு வேண்டினார்கள். உடனே, அவர் முதலியாரது கருத்தையே "எவரிதோனெ தெலுபுது" என்னும் தெலுங்குக் கீர்த்தனையில் வைத்துப் பாடினார். (யாரிடம் சொல்லுவேன் என்பது பொருளாகும்.)

முதலியார் மிக மகிழ்ந்தார். ஆச்சரியமுற்றார். தம்முடைய வேலையாட்களை அழைத்து, பல்லக்குக் கொணரச்செய்து அப் பல்லக்கில் ஒரு மூலையில் ரூ. 1000-த்தை ஒரு பையில் கட்டிவைத்து, அதில் தியாகரை ஏறிச் செல்லுமாறு செய்தார். இந்தப் பணமுடிப்பு அதில் வைக்கப்பட்டது தியாகருக்குத் தெரியாது. சீடர்கள் மாத்திரம் அறிவார்கள்.

விடியற் காலையில் பல்லக்குப் புறப்பட்டது. தியாகராஜரும் பல்லக்கில் எழுந்தருளினர். பல்லக்கில் வைக்கப்பெற்ற பணமுடிப்பை அறிந்த சில திருடர்கள், பல்லக்கின்மேல் கல்மாரி பொழிய ஆரம்பித்தனர். தியாகராஜரது சீடர்கள் தூரத்தில் ஒரு கள்வர் கூட்டம் சமீபித்து வருவதையறிந்து "கள்வர்கள் கள்வர்கள்" என்று கூவினார்கள். குருவானவர் பல்லக்கை விட்டுக் கீழேயிறங்கித் திருடர்களைப் பார்த்து "என்னிடம் ஒரு சிறு காசுகூட இல்லையே! இப்பல்லக்குத்தான் இருக்கிறது: வேண்டுமெனின் எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார். உடனே அவருடைய சீடர்கள் குறுக்கிட்டு, "குருவே! சுந்தரேச முதலியார் தங்களுக்குத் தெரியாமல் ரூ. 1000-ஒரு பையில் கட்டி பல்லக்கில் வைத்தார். அதைப்பற்றி ஒன்றும் பேச வேண்டாமென்று எங்களிடம் சொன்னார்" என்றார்கள். தியாகராஜர் உடனே அப் பணப்பையை யெடுத்துக் கள்வர்கள் முன்னிலையில் வீசியெறிந்து, "இதோ நீங்கள் விரும்பிய பணம் கிடக்கின்றது. எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

கள்வர் தலைவன் "ஐயா, இல்லை, அது தங்களுடையதே; இந்த வினாடியினின்றும் யாங்கள் தங்களடிமைகளாயினோம்" என்றான்.

"அப்படியாயின் ஏன் எங்கள் மேல் கல்மாரி பொழிந்தீர்கள்?" என்று தியாகர் கேட்டார்.

கள்வர் தலைவன்:— "பணப்பையைக் கொள்ளை கொள்ளத்தான் நாங்கள் கற்களை வீசினோம்.

நாங்கள் கால வேறுபாட்டால் திருடர்களானோம். எங்கள் தந்தையின் காலத்தில் எம் சுற்றத்தார்கள் உழைப்பாளிகளா யிருந்தனர். செல்வமும் உடல் வலியும் ஒருங்கே பெற்றிருந்தனர். சில வருஷங்களில் என்ன மாறுதல்! எங்கு பார்த்தாலும் கொடுமை தாண்டவம் ஆடுகின்றது. மனித இயற்கை தலைகீழாக மாறுபட்டுக் காண்கின்றது. பொதுவில் ஒன்று, பேசுகின்றனர். மறைவில் மற்றொன்று செய்கின்றனர்.

தியாகர்:— இதேது, அறிவுரைகள் பேசுகின்றாயே!

கள்வர் தலைவன்:— ஐயா, அதற்குக் காரணம் உண்டு. என்னுடைய தோழர்கள் கற்களை வாரி, தாங்கள் வீற்றிருக்கும் பல்லக்கின் மேல் வீசி யெறிந்தபோது, யான் ஒரு பெருங்கல்லைத் தூக்கித் தங்கள் மேல் விசி யெறிந்தேன். அக்கல் மீண்டுவந்து என்மேல் விழுந்து எனக்குப் பெருத்ததொரு காயத்தை யுண்டுபண்ணிற்று. அதற்குக் காரண மென்ன வென்று பார்த்தேன். அங்கு இருளில் வீரர்கள் கண்ணைப்பறிக்கும் ஒளிபொருந்தியவர்கள் நின்றுகொண்டு தங்களைப் பாதுகாவல் செய்தனர். அவர்களிடம் சென்று 'நீங்கள் யார்' என்று கேட்டேன். அவர்கள் என் காதருகே "யாங்கள் இந்தப் பெரிய குருவிடம் வித்தை பயிலும் கடைப்பட்ட சீடர்கள்" என்று தங்களைச் சுட்டிக்காட்டி மறைந்தனர். தாங்கள் இந்தத் தேவர்கட்கே குருவானால், யாங்களும் திருட்டுத்தொழிலை விடுத்துத் தங்கட்குச்

சீடர்களாய் விடுகின்ருேம். அருள் கூர்ந்து இந்தத் தேவர்கள் யாரென்று கூறுங்கள் என்ருன்.

தியாகராஜர், இதைக்கேட்டதும் எல்லையிலா வருத்தமடைந்தார். ராமலக்ஷ்மணர்களே, தம்மைக் காப்பாற்ற வந்திருந்தனர் என்றுணர்ந்தார். 'அந்தோ ஒரு கள்வர் தலைவனுக்குக் காட்டிய காட்சி அடியேனுக்குக் காட்டவொண்ணுதா? அப்படிப்பட்ட பாக்கியம் எனக்கில்லையா?' என்று கூறி, உடனே "முந்து வெனுகா" என்னுங் கீர்த்தனையைப்பாடினுர். இதன் பொருள்: 'ஏ ரகுநந்தனு! என் முன்னேவா, என்பக்கத்தேவா, உன்னழகைப் போன்ற அழகை யெங்கே காண்பேன்? உனது கோதண்டத்துடன், இலக்குமணனைக் கூட்டிக்கொண்டுவா' என்பதாகும். இந்த நிகழ்ச்சிக்கு இக்கீர்த்தனை அகச்சான்ருகும்.

கள்வர்தலைவன் அவ்விரு தேவர்களும் ராமலக்ஷ்மணர்கள் என்றறிந்து மகிழ்ந்தான். அவனும் அவன் ஆட்களும் பல்லக்கைச் சுமந்தனர். அவர்கட்கு அந்தப் பணமுடிப்பைக் கொடுத்துவிட்டார் குரு. பல்லக்கில் உட்க்கார்ந்த வண்ணம், தம்மை ஆபத்தினின்றுங் காப்பாற்றிய ராமனைத் தியானித்து "ராமபாண" "எவரிஞ்சிரா" என்னும் கீர்த்தனைகளைப் பாடி யருளினுர்.

அதன்பின் காஞ்சிபுரம் போய்ச் சேர்ந்தார். தியாகர் அவ்வூர் காமாக்ஷியம்மையின் மேல் ஒரு கீர்த்தனையைப்பாடி வணங்கிவிட்டுத் திருவிடைமருதூர் நோக்கிப் புறப்பட்டார். காஞ்சிக்கும் திருவிடைமருதூருக்கும் இருநூறு மைல் தூரம்.

போகும்போது வழியில் ஒரு கிராமத்தினருகே, காலையில், அழுகைக்குரல் தியாகருக்குச் செவியில் விழுந்தது. உடனே தியாகர் பல்லக்கை நிறுத்தச் செய்து, கள்வர் தலைவனைப் பார்த்து நீ சென்று செய்தி இன்னதென்று அறிந்துவா என்றார். கள்வர் தலைவன் சென்று செய்தியனைத்தையும் அறிந்து வந்து குருவினிடம் கீழ்வருமாறு கூறினான்:—

MADURA TAMIL

திருப்பதியாத்திரையின் பொட்டு, தமது பத்தினியுடன் புறப்பட்ட ஒருவர் வழி தப்பி இரவு பத்து மணிக்கு இக்கிராமத்தை யடைந்தார். கிராமத்திலுள்ளாரெல்லாம் படுத்துறங்கிவிட்டனர். கிராமத்தருகே கொடிய விலங்குகள் உண்டு. அவைகளுக்கஞ்சி அவ்வூர்க்கோயிலருகே சென்று கதவைத் தட்டினார் யாத்திரிகர். கதவு திறக்க யாவரும் வரவில்லை. யாத்திரிகர், தம்முடைய மனைவியையும் குழந்தையையும், கொடியவிலங்குகள் ஊறு செய்யா வண்ணம் காப்பாற்றுவதற்காக, கோயிற் சுவரின் பேரில் ஏறி உட்பக்கமாக வந்து கதவைத் திறப்பதற்காகக் குதித்தார். அங்கே யிருந்த ஓர் ஆழமான கிணறொன்றில் தவறி விழுந்து உயிர் விட்டார்.

வெளியிலிருந்த அவர் மனைவி கோயிலிலுள்ளே நிகழ்ந்தது அறியாளாய், இரவெல்லாம் தன் கணவனை நினைத்த வண்ணமாயிருந்தாள். பொழுது புலர்ந்தது. கோயிற் காப்பாளர்கள் கதவு திறந்தனர். கணவனைப் பிரிந்திருந்த மனைவி விரைந்து உள்ளே யோடினாள். கணவன் கிணற்றில் வீழ்ந்து உயிர் நீத்துக்கிடந்தலை அறிந்தாள். பதறினாள், வாய்விட்டரற்றினாள் ஊரா


ரெல்லாம் வந்துவிட்டார்கள். கிணற்றில் கிடந்த பிரேதத்தை வெளியில் கொணர்ந்து போட்டார்கள். யாத்திரிகரின் மனைவி தம் கணவனிறந்தமைக்கு வருந்தி அழுதுகொண்டிருக்கிருள். தியாகராஜர் இவ்விஷயம் அறிந்து மனங்கசிந்து இரங்கினுர். இறந்துகிடக்கும் யாத்திரிகனிடஞ் சென்று அவனை உயிர் பெற்றெழுவதற்கு "ஸ்ரீராம பாதமா" என்னுங் கீர்த்தனையை அமிர்தவாகினி இராகத்தில் பாடியருளினுர். அக்கீர்த்தனையின் பொருள்: ஓ ராகவனே. அகலிகை கல்லுருத்தாங்காது வருந்தியதை உணர்ந்து, இரக்கமுற்று, அவளது பழைய வடிவம் கிடைக்குமாறு செய்தாய். அதுபோல் இவனுக்குயிர் கொடுக்குமாறு பிரார்த்திக்கிறேன் என்பது. தியாகராஜர் பிரார்த்தனைக் கிரங்கி ராமன், இறந்த யாத்திரிகனுக்குயிர்ப் பிச்சை யளித்தான். நித்திரையினின்று எழுந்தவன்போல் எழுந்து நடந்த உண்மைஅறிந்து தியாகராஜரை வணங்கினுன் தியாகரும் அவனுக்கு ஆசிகள் வழங்கினுர்.

ஒரு வணிகனும் வணிகநங்கையும் ஓரிடத்தில் தங்கியிருந்தபோது வணிகன் அரவு தீண்டப் பெற்று உயிர்நீத்தான். அக்கன்னி இறந்தவன் மெய் தீண்டாது வாய்விட்டரற்றினுள். அவ்வழுகுரல் அவ்வழியே பல்லக்கில் சென்றுகொண்டிருந்த ஞான சம்பந்தப்பெருமான் திருச்செவியில் விழுந்தது. பல்லக்கை நிறுத்தி செய்தி யறிந்து, பிள்ளையார் அரவின் விஷத்தைப் போக்கி, வணிகன் உயிர்பெற்றெழுமாறு செய்தார். மயிலாப்பூரில் சம்பந்தர் எலும்பைப் பெண்ணுருவாக்கினுர். அப்ப மூர்த்திகள் அப்பூதியடிகளாரின் மூத்த மைந்தன், திருநாவுக்கரசென்பான், சர்ப்பந்தீண்டி

இறந்தபோது, 'ஒன்று கொலாம்' எனுந்தேவாரப் பதிகம் ஓதியருளிப் பிழைக்குமாறு செய்தார். சுந்தரர் முதலையுண்ட பாலனை யழைத்தார். இப் பெரியார்கள் ஆண்டவனருள் பெற்றவர்கள். அவர்களுக்கும் ஆக்கல் அழித்தல் என்னும் முத்தொழில் புரியும் சக்தியுண்டு. அவர்களது வாக்கு தெய்வவாக்கு. அவ்வாக்கிற்குத் தனிச் சக்தியுண்டு. அவர்கள் உள்ளத்தில் ஆண்டவன் இமைப் பொழுது கூட நீங்காது உறைவதால் அவர்களின் எண்ணங்களெல்லாங் கூட ஆண்டவனுடையனவே. அவர்கள் சிந்தையெல்லாம் ஆண்டவனிடத்தேயாம். தன்னலமற்ற எண்ணங்கள். ஆகவே அவர்கள் வாக்கிற்கு ஒரு தனிச் சக்தி இருந்தது. அதில் ஐயமில்லை.

தியாகராஜர் மாலை வரையில் அவ்வூரில் தங்கியிருந்து, பின்னர் திருவிடைமருதூர் நோக்கிச் சென்றார். கோவிந்தபுரத்திலுள்ள போதேந்திர ஸ்வாமி மடஞ் சென்று தரிசித்துக் கொண்டு, திருவிசைநல்லூருக்குச் சென்று அவ்வூரிலிருந்த "ஐயாவாள்" என்று பேர் பெற்ற ஸ்ரீதரவேங்கடாசாரியார் என்னும் பெரியாரைக் கண்டு வணங்கிச் சென்றார். அங்கிருந்து நாகப்பட்டினஞ் சென்று, அவண் கோயில் கொண்டருளியுள்ள, நீலாயதாக்ஷி யம்மையையும், காயாரோகண ஸ்வாமியையும் தரிசனஞ் செய்து கொண்டு, அங்கிருந்து ராமேஸ்வரம் தனுஷ்கோடி, முதலிய தலங்களைத் தரிசிதது்க்கொண்டு, மதுரை நோக்கிப் புறப்பட்டு, அக்கரையடைந்து, மதுரை மீனாக்ஷியம்மனைத் தரிசித்துக் கொண்டு, அங்கிருந்து ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். அங்கே சிலகாலம் தங்கி

அரவணைச் செல்வனை வழிப்பட்டுக் கொண்டிருந்து திருவையாற்றிற்கு மீண்டு வந்து சேர்ந்தார். தியாகராஜர், தமது சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு, திருவையாற்றிற்கு வந்து சேர்ந்த பின்னர், தாம் சென்ற விடங்களில் நடந்த நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்தார். ராமனும் இலக்குவனும், தம் பொருட்டு, வில்லேந்தி வந்து, கள்வர்களைத் துரத்தியதை நினைத்து, அவர்கள் கருணைக்கு மகிழ்ந்தார். 'துஷ்ட நிக்கிரகம் சிஷ்டபரிபாலன'ஞ் செய்யும் பொருட்டு, பகவான் ராமாவதாரம் எடுத்தார். ராவண வதத்தின் பொருட்டு, அவ்வவதாரம் நிகழ்ந்ததாயிருப்பினும், அவ்வடிவத்தைத் தியானிக்கும் அடியார்க்கு எக்காலத்திலும் அவ்வடிவத்தோடு அருள் புரிவான் என்னும் உண்மை உறுதிப்பட்டு விட்டது.



௭

## மூப்பும் முடிவும்

தியாகராஜர், இசைவானத்தில் ஈடில்லா மதி போல் விளங்கினார். மாசற்ற உள்ளம் படைத்தவர். நிஷ்காமிய பூஜை புரிந்து வந்தார். இசையொன்றி னால்தான் ஒருவர் வீட்டினை (மோக்ஷத்தை) அடைய முடியுமென்று நம்பினார். மனமென்னும் இரும்பை உருக்கும் ஆற்றல் இசைக்கு உண்டு. அவ்வாறுருக்கி ஆண்டவனுடன் கலக்கச் செய்யும். ஆகவே இசையை மோக்ஷசாதனமாகக் கருதுவதில் இழுக் கொன்றுமில்லை. தியாகர், இசையுலகிற்கு இயற்றி யுள்ள சேவை அளவிடற் கரிது. அவர் இயற்றியுள்ள நூல்களாவன:—(1) திவ்விய நாமாவளி (2) ராக ரத்ன மாலிகா (3) பக்த விஜயம் (4) நௌக சரித் திரம் (5) பஞ்ச ரத்தினம். அவருடைய கீர்த்தனை களெல்லாம் திராக்ஷை ரசம்போல் மிக எளிய நடை யில் இயற்றப் பெற்றவை. எல்லோராலும் எளி தில் புரிந்து கொள்ளக்கூடியவை. "உள்ளத்தில் ஒளி யுண்டானால், வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்றார் பாரதியார். தியாகப் பிரம்மத்தின் உள் ளத்தில் ஒளி தோன்றிற்று. ஆகவே அவர் வாக்கி னிலே தெளிவுண்டாயிற்று.

தியாகராஜரது மனைவியார் இறந்து விட்டார். மரணத்தருவாயில் சந்நியாசங் கொள்ள விரும்பி யிருந்தார் தியாகர். மரணத்திற்கு முன்னரே, தமது மனைவி மரித்தது, தியாகர் சந்நியாசங் கொள்ள அநு

கூலமாயிற்று. அதைப்பற்றி ஆலோசித்துக்கொண் டிருக்குங்கால் ஒருநாளிரவு, அவருடைய கனவில் ராமபிரான் தோன்றி, "நீ இவ்வுலகிற்கு வந்த காரியம் முடிந்துவிட்டது. இன்னும் பத்து நாட்களில் உனக்குச் சாயுச்சிய பதவி கொடுக்கின்றேன். சந்நியாசங் கொள்வாயாக" என்று கூறி மறைந்து விட்டார். பொழுது விடிந்தது. அதுகாறும் அகத் துறவு பூண்டொழுகிய தியாகராஜர், இப்பொழுது ராமபிரான் ஆணையின்படி புறத்துறவிக்குரிய காவி உடையுந் தரித்தார்.

பத்து நாட்கள் பறந்துவிட்டன. ராமன் வர வில்லை. தியாகர் ராமனை நினைந்து "பரிதாபமுகானி" என்னுங்கீர்த்தனையைப் பாடினார். அதன் பொருள்: "ஓ ராமா! நீ சீதையுடன் சரயு நதியில் தங்கப் படகில் வேடிக்கையாக இங்குமங்குமாக ஆடிப்பாடிக் கொண்டிருக்கின்றாய். கருணை பொழியுங் கண்களால் பத்து நாட்களில், ஏழை யேனை யழைத்துச் செல்வ தாக வாக்களித்தாய். நீ சொன்ன கெடுவும் தப்பி விட்டது. என்னை மறந்தனையோ? "ஏந்தால்!" என்பது. இக்கீர்த்தனையைப் பாடி முடித்தார். உடனே அவருயிர் உடலைவிட்டுப்பிரிந்தது. ராமனது திருவடியிற் கலந்தார் இசையரசர். 1847-ம் ஆண்டு ஜனவரிமீ 6வ புதன்கிழமை இவ்வுலக வாழ்வை நீத்தார் என்று அறிஞர் கூறுகின்றார்கள். தியாகர், இறுதிக் காலத்தில், காவி தரித்து, துறவு நிலையில் இருந்தமையால், அவருடலைத் தீக்கிரை யாக்காமல், காவிரியின் வடகரையில் அடக்கஞ் செய்து, அவ் விடத்தில் சமாதி கட்டினார்கள். ஆண்டுதோறும்

குரு பூசை மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. சில ஆண்டுகளாக, குரு பூசை காலத்தில், பல சங்கீத வித்துவான்கள் அவண் வந்து, பாடி வருகின்றனர். ஒரு வாரம் பெரியதோர் இசைவிழாக் கொண்டாடப் பெறுகின்றது. பல பிரமுகர்கள் தவறாது வருகின்றனர். எல்லோரும் தியாகரது அனுக்கிரகத்தையும், ராமனதருளையும் பெற்றுச் செல்லுகின்றனர்.

ஒப்புயர்வில்லா நீதி நூலை உலகிற்களித்த வள்ளுவரைத் தந்த தமிழ்நாடு, ஈடிலா இசை மன்னர், தியாக பிரம்மத்தை ஈன்றளித்த பெருமையுடைத்து நம் தண்டமிழ் நாடு. இன்னும் பல பெரியார்களை யளிப்பதாக! உலகம் உத்தமர்களால் கடைத்தேறுவதாக! வாழ்க தியாகராஜர். வாழ்க தமிழ் நாடு.



# முத்துத் தாண்டவர்

## வாழ்க்கை வரலாறு

### 1

#### இளமையும் வறுமையும்

சோழவள நாட்டிலே, சைவசமய குரவருள் ஒருவரும், மூவாட்டைப் பிராயத்திலே, பார்வதி யம்மையாரின் ஞானப் பாலருந்தியவரும் ஆகிய திருஞான சம்பந்தப் பெருமான் திருவவதாரஞ் செய்தருளிய திவ்விய சிவக்ஷேத்திரமாகிய சீர்காழிப் பதியில், தோணியப்பருக்கு வாத்தியத்தொண்டு, இசைத்தொண்டு முதலியநற்றொண்டு புரியும் பேறு பெற்ற இசைவேளாண் குலத்தில், எளிய குடியில், 'தாண்டவர்' என்பார் தோன்றினார்.

தாண்டவர் சிவநேசத்துடன் வளர்ந்து வருகையில் முற்பிறவியில் செய்த தீவினைப் பயனால், தொழு நோய் (குஷ்டநோய்) இவரைப் பிடித்தது. உலகில் மக்களைப் பிடிக்கும் நோய்களெல்லா வற்றிலும், இந் நோய் மிகக் கொடியது. சிவாபராதத்தால் சிவபெருமான் இந்நோயைத் தண்டனையின் பொருட்டுக் குற்றவாளிக்கு அளிக்கின்றார் என்பர் பெரியோர். 'நெற்றிக் கண்காட்டினும் குற்றம் குற்றமே' என்று சாதிக்கும் நாவீறு படைத்த

நக்கீரர்க்குச் சிவபெருமான் இத்தொழு நோயையே கொடுத்தார் என்பது யாவரும் அறிந்ததாகும்.

இந்நோய் தொத்து நோயென்று, இந்நோயாளிகளின் அருகில் வருவதற்கு மக்கள் அஞ்சுவர். அவர்கள் பரிந்து தொட்ட பாத்திரத்தையும், படுத்திருந்த படுக்கையையும், இருந்த இடத்தையும், தொடமாட்டார்கள் ஏனையோர். ஆருயிர் நண்பரேனும், அரும்பெறல் மக்களேனும், மனைவியேனும், அருகில் வருவதற்கு அஞ்சுவர். அருவருப்புக்கொள்வர். நிறைந்த செல்வம்இருப்பின் செல்வத்தின் பொருட்டாவது, குஷ்டரோகியென்று பாராமல் பலர் வந்து அளவளாவிச் செல்வர். அவர் காலால் ஏவிய குற்றேவல்களை மனமுவந்து கையால் செய்து மகிழ்வர். "பணம் பத்து விதம் செய்யும்" என்பது ஒரு பழமொழி யல்லவா! அப்பத்து விதங்களில் இஃது ஒரு விதமாம்.

தாண்டவன் தரித்திரர். தாயுமிலி, தந்தையிலி தாம் தமியனுயினார். முற்பிறவியில் மலையத்தனை தீவினை புரிந்திருந்தும் கடுகத்தனை நல்வினை புரிந்திருந்தார். அதன் பயனுக அவர் மனம் ஆண்டவனிடம் சென்றது.

## 2

## தோணியப்பர் தரிசனமும், சிவநேசச்செல்வியின் பரிவும்

தாண்டவர், தோணியப்பரிடம் இடையறு அன்பு செலுத்திவந்தார். விடியற்காலையில் படுக்கை விட்டெழுந்து, நீராடி, கோயிலுக்குச் சென்று, தோணியப்பரையும், திருநிலை நாயகியாகிய உலக மாதாவையும், நாடோறும் தரிசித்து வந்தார். இளமையிலேயே இவர் தொழுநோய்க்கும், வறுமை நோய்க்கும், ஆட்பட்ட காரணத்தால், இவர் குலத்திற்கு உரிய வித்தையையும் அறிந்து கொள்ளாராயினர். தாய்மொழியாம் தமிழ் மொழியும் சரிவரப் பயில வில்லை. ஆனால், "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்ற மணிவாசகர் வாக்குப்படி, தோணியப்பர் அருளால், தாண்டவர், கோயிலுக்குச் சென்று தவறாது இறைவனைத் தரிசனம் செய்து வந்தார்.

கோயிலுக்கு இவர் போய், ஸ்வாமி தரிசனஞ் செய்து வருங்கால் இசை வேளாண் குலத்துதித்த இசைச் செல்வி—சிவநேசச் செல்வி— சிவாலயத் தொண்டு புரிகின்றவள்—நாடோறும் கோயிலில் வந்து சிவநாம சங்கீர்த்தனங்களைப் பக்தி பரவசமாய்ப் பாடிக்கொண் டிருந்தாள். தாண்டவர் இக்கீர்த்தனங்களைக் கேட்டு ஆனந்தித்து வந்தார். இசை யின்பத்திலும், அக்கீர்த்தனைகளில் அடங்கிக் கிடக்கும் அர்த்த நயத்திலும் ஈடுபட்டார் தாண்டவர். ஆகவே அம்மையாரைப் பின் தொடர்ந்து, அவர் வீட்டில் பாடிவருகின்றபோதும், அப்பாசுரங்களைக்

கேட்டு மகிழ்ந்து வந்தார். அவ்வம்மையார் இளகிய மனமுடையவர். தாண்டவருக்குச் செவியுணவளித்த தோடு சிறிது அவர் வயிற்றுக்கும் உணவளித்து அவரை ஆதரித்து வந்தார். தாண்டவர் தொழு நோயாளராயிருப்பினும் சிவபக்தி உடையராயிருந்த தால், இசைச் செல்வி அவர்பால் அன்புகாட்டி வந்தார். நமது வாகீசர்.

"சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடு
வானாளத் தருவரேனும்,
மங்குவார் அவர்செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லாராகில்,
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்,
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர்
கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரே!"

என்றருளிய வண்ணம், இவ்வம்மையார் 'தாண்டவர்' தொழு நோயரேனும் கங்கைவார் சடைக் கரந்தா ராகிய சிவபிரானுக்கு அன்பரானதால், அவருக்கு வேண்டிய உபசாரம் புரிந்து வந்தார்.

## 3

## மக்கள் அலர்தூற்றலும், தாண்டவரின்மனத்துயரும்

தாண்டவர் வழக்கம்போல், நாடோறும் தோணியப்பர் தரிசனமும், இசைச் செல்வியின் இசையமுதும், வயிற்றுக்கு இனனமுதும், முறையே பெற்றுவந்தார். பனைமரத்தின் கீழிருந்து பாலை அருந்தினும், பாமுலகினர் கள்ளைத்தான் அருந்தினதாக அறைவர். இசைச்செல்வி, சிவநேசம் பூண்டவள் எனினும், தாசி குலத்தில் பிறந்தவளாதலாலும், அவள் சுற்றத்தார்களும், தாண்டவரின் சுற்றத்தார்களும், முன்னரே பகையாயிருந்த காரணத்தாலும், அவர் அவ்வம்மையின் வீட்டிற்கு வருதல், இன்பச் சேர்க்கையின் பொருட்டு என்று, அவ்வம்மையின் சுற்றத்தாராகிய ஒரு சில ஸ்திரீகள் பொய்வதந்தியைப் பரப்பினர். ஊர் முழுவதும் இவ்வலர்—இவ்வவதூறு காட்டுத் தீப்போல் பரவிற்று. சாதாரணமாக ஒருவன் அல்லது ஒருத்திக்கு நற்புகழ் விரைந்து பரவுவதில்லை. ஒருவன் நற்புகழ் பெறவேண்டுமெனின் பலவாண்டுகள் பாடுபடவேண்டும். ஆனால் அவப்பெயர்—பழிச் சொல்—விரைந்து பரவும் தன்மைத்து அன்றோ! இது மக்களின் இழிந்த பண்புகளில் ஒன்றாகிய புறங்கூறலின் வகையைச் சேர்ந்த அலர் தூற்றல்-பழிதூற்றல் என்னும் பண்பினால், ஒருவனது கெட்ட பெயர் விரைந்து பரவுகின்றது. ஒருவனைப் பற்றி மற்றொருவன் இழித்துப் பேசினால் மற்றவர்கள் மகிழ்ந்து கேட்பார்கள். பேசுகின்றவனுக்கு வேண்டிய உப

சாரமும் செய்வர், கேட்கின்றவர்கள். இத்தகைய இழி தகவுள்ள பண்பினுல் தீங்குணர்ந்த 'நமது குமர குருபரர்' பிறருடைய நன்மதிப்பை அடையும் முறையை யெடுத்துக் கூறவந்தபோது 'புறங்கூறல்' என்னும் தீப்பண்பை கடிந்து விலக்கவேண்டும் என்கின்ருர்:


"பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்

என்ற பாசுரத்தில் 'பிறரின் பெருமையைத் தூற்றுதல் வேண்டும்' அவர் தம் சிறுமைகளை மறைத்தல் வேண்டும் என்கின்ருர். ஆனுல், மக்களில் பலர் பிறரின் சிறுமைகளைத் தூற்றுகின்றனர். பெருமையை மறைக்கின்றனர். காரணம் அவரது இழிந்த பண்பே.

ஒருவனைப் பற்றிய பொய்ப்பழியோ, மெய்ப் பழியோ, உலகில் விரைந்து பரவும் தன்மைத்து. உலகத்தார் உண்டெனில் ஒன்றுண்டு. இல்லெனின் இனறு. பலர்கூடி ஒருவனை பெரியோனுகவுஞ் செய்யலாம், சிறியோனுகவும் செய்யலாம். இதைக் கருதியோ "யாரேயாயினும் நால்வர் பின்னிடில், தேவ ரென்னுமிம் மாநிலம்" என்று சிந்தாமணி யாசிரிய ராகிய திடுத்தக்கதேவர் இவ்வுலகியற்கையை நுனிந் தறிந்து, நயம்படக் கூறுகின்ருர்.

அவ்வலர் அவ்வம்மையின் காதில் விழுந்தது. அவப்பெயர் ஏற்பட்டதற்கு, அம்மையின் மனம் புண்பட்டது. தாண்டவர் இதையுணர்ந்தார். மனம்

உடைந்தார். அம்மையின் வீட்டிற்குப் போவதும் தவறெனஎண்ணினார். தான் போவதனால், குற்ற மற்ற மங்கைக்குக் கெட்ட பெயர் வந்ததென்று எண்ணி மனம் மிகவுருகிக் கண்ணீர் வடித்தார். கன்னியர்க்குக் கற்பினுஞ் சிறந்த பொருளில்லை யாதலால், அதற்கு யாரேனும் இழுக்குரைப்பரே யாயின், அதைவிடக் கொடிய தீங்கு வேறென்ன வேண்டும்? பழி வந்து சேர்ந்ததென்று எண்ணி அவ்விசைமாது வீட்டிற்குப் போவதையும் விடுத்தார். தட்டில்லாமல் தாண்டவருக்கு உணவு கிடைத்து வந்தது; அதற்கும் ஆபத்து வந்தது. எங்கேனும் உணவு கிடைததால் உண்பார். இன்றேல் பட்டினி யால் வாடுவார். வம்ப மாக்கள் தாண்டவருக்குச் செய்த பேருபகாரமாகும் இது.



## 4

### தேவியின் திருவருள் பெற்றமை

தாண்டவர் இவ்விதம் உணவின்றியும், உதவு வாரின்றியும் தடுமாறி வரும் நாட்களில் ஒரு நாளிரவு சிவாலயத்தில் வழக்கம்போல் அம்மையையும் ஐயனை யும் தரிசித்துத் தோத்திரஞ் செய்துக் கொண்டிருந்து பசியினால் மிகவாடிக் களைப்புடன் வாகனக் கிடங் கிற்குள் போய்ப் படுத்துறங்கி விட்டார். இவர் படுத்துறங்குவதைக் கோவில் ஸ்தானிகர்கள் கவனிக் காமல், அர்த்தஜாம பூஜையானவுடன் கோவில் திருக் காப்பிட்டுக் கொண்டுபோய் விட்டனர்.

வயிற்றில் உணவின்மையால் நல்ல நித்திரை யின்றி நள்ளிரவில் தாண்டவர் நித்திரை கலையப் பெற்று எழுந்து உட்கார்ந்தார். தனியே கோவிலில் பூட்டுண்டுக் கிடந்ததை உணர்ந்தார். மெய்ப்பிணியும், பசிப்பிணியும், தன்னை வருத்துவதை யெண்ணிக் கண்ணீர் வடித்தார். உலகிற்குத் தாய் தந்தையாய் விளங்கும், தோணியப்பரையும், திருநில நாயகியா ரையும், தியானித்து "அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே! அன்பினில் விளைந்த ஆரமுதே! என் மெய்ப் படுபிணி பொறுக்கேன். பசிப் பிணியாற்றேன். என்னை யெற்றுக்கிவர இருத்தினாய்? முறையோ? தமியேன் முதல்வா! தாய் தந்தையில்லை, சுற்றமில்லை; வேறு கதியில்லை. தாயும் நீ, தனித்தந்தையும் நீ! 'கருப் பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும் விருப்புற்றமுதளிக்கும் ஐயன்' என்று கூறுகின்றார்

களே பெரியோர்கள். அது என்னளவில் பொய்த்து விட்டதா? ஏழையேன்பால் ஏன் அவ்வளவு பராமுகம் உனக்குத் தெய்வமே! யானை முதல் எறும்பீறுய சகல ஜீவராசிகளுக்கும், சித்தமகிழ்ந்து அளிக்கும் தேசிகனே! மெத்தப் பசிக்குது. பாவியேன் பாழ் வயிற்றைப்பற்றி இறுக்குதே! என் செய்வேன்? என்று கதறினர். வருந்தியழைத்தால் வாராதிருப்பனே?''

கருணாமூர்த்தியான கண்ணுதற் பெருமான் திருச் செவியில், தாண்டவர் முறையிட்டுப் புலம்பல் வீழ்ந்தது. தாண்டவரின் துயருணர்ந்தார். உலக மாதாவாகிய பார்வதியம்மையாரைக் கடைக் கண்ணுற் பார்த்தார் கறைமிடற்றண்ணல். தேவியார் குறிப்புணர்ந்தார். பால் நினைந்தூட்டுந் தாயினுஞ் சாலச் சிறந்த தாயல்லவோ மலையரசன் பொற்பாவை. உடனே அக்கோயிலின் குருக்களுடைய குமாரத்தியைப்போல வேடம் புனைந்து, கையில் ஒரு தட்டில் உணவுடன் வந்து, தாண்டவரைப் பார்த்தார்.

தேவியார்:—தாண்டவா! நீ ஏன் இப்படி வருந்துகின்றாய்?''

தாண்டவர்:—தாயே! என்னுடலைப் பெரு வியாதியும், பசிப்பிணியும் வருத்துகின்றன. ஆதரிப்பாரில்லை. பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லையல்லவா? என்னைத் தாங்குவர் யாரும் இல்லை.

தேவியார்:—இதோ உணவு கொணர்ந்திருக்கின்றேன். என் தந்தை இவ்வுணவைக் கொடுத்து வரச் சொன்னார். சீக்கிரம் சாப்பிட்டுக் களையைப் போக்கிக் கொள்.

தாண்டவர்:—"அம்மா! குருக்களையா என் மீது இவ்வளவு கருணை காட்டி உங்களிடம் உணவு கொடுத்து இந்த வேளையில் இங்கு அனுப்பியதற்கு யான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். இவ்வுணவை உண்டு என் வயிறு குளிர்ந்தது. என் வயிறு வாழ்த்துகின்றது. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தாரன்றோ? எல்லாத் தானங்களிலும் அன்னதானம் சாலச் சிறந்தது. அம்மா! உங்களுக்கு இந்த ஏழையின் பொருட்டு மிகவும் தொந்தரவாயிற்று. இந்தக் குஷ்ட நோய்க்கு ஒரு மருந்து சொல்லுங்கள். மிகவும் உபகாரமாயிருக்கும்.

தேவியார்:—அப்பா, தாண்டவா, நீ தில்லையின் எல்லையில் தாண்டவமாடும் பொன்னம்பலவனைத் தரிசித்து அவன் பேரில் பாடினால் இந்நோயும் நீங்கும். உனது பிறவி நோயும் நீங்கும்.

தாண்டவர்:—அம்மா கல்வியில்லாத கசடனாயிற்றே. யான் எப்படிப் பாடுவேன். இலக்கியம், இலக்கணம் படித்ததில்லை. காரிகை கற்றல்லவா கவி சொல்லவேண்டும். எனக்கொன்றும் தெரியாதே. யான் எவ்வாறு கவி இயற்றுவேன்.

தேவியார்:—தாண்டவா, நீ கவல வேண்டாம். பொன்னம்பலவன் கலை வடிவினன். அவனைத் தரி

சித்து அவனருள் கிட்டினால் உடனே உனக்குப் பாடும் சக்தி யேற்படும். நீ அங்கே தரிசிக்குங்கால், அங்கு உன்போல் தரிசனத்திற்கு வந்துள்ளவர்களால் என்ன சொல் உண்டாகின்றதோ, அந்தச் சொல்லையே முதலாக வைத்துக்கொண்டு பாட ஆரம்பித்தால், பாட்டு தன்னால் அமையும். காரிகை கற்கவேண்டாம். பாட்டு விற்பவன் பரமன். அஞ்சாதே. அருங்கலைநாதன் - அரவாபரணன் - அம்பலத்தரசு, அருந்தமிழ்ப் பாட்டையே அருச்சனையாக ஏற்றுக் கொள்ளுகின்றான். சுந்தரன் தமிழுக்கும், சம்பந்தன் பாடற்கும், நாவுக்கரையன் தேவாரத்திற்கும், மணிவாசகனது திருவாசகத் தேனுக்கும், மனம் பூரிக்கும் மகாதேவன் துதிவிருப்பன். கேட்டதெல்லாங் கொடுப்பான். பவப் பிணிக்கே மருந்தாவான். கேவலம் இவ்வுடற் பிணி போக்குவது அவனுக்கு அரிதல்ல. எளிதிற் போக்குவான். கடைக்கண்ணேக்கால் உனது பிணியைப் போக்கி விடுவான்" என்று கூறி முடித்து, மானிடப் பெண் வடிவில் வந்த தாய் சோதி வடிவாக மறைந்தாள்.

தாண்டவர் அப்பொழுதுதான் அவன் வந்து, தனது பசியைத் தீர்த்து, உடற் பிணிக்கும் உலகப் பவப் பிணிக்கும் ஒருங்கே மருந்து கூறிச் சென்றது உமையம்மையார் என்றுணர்ந்தார். ஓவென்றலறினார். "உலக மீன்ற தாய், பாவியேன் பொருட்டு, கால் கடுக்க நடந்து, கை வருந்த உணவு சுமந்து வந்தனள் அல்லவா? முற்பிறவியில் தீவினை புரிந்தமையால் தொழுநோய் வரப் பெற்றேன். சிறிதளவு நல்வினை புரிந்திருப்பேன் போலும். அதனால் அம்மை

யாரின் தரிசனம் பெற்றேன். அவரால் ஊட்டப் பெற்றேன். தில்லையம்பலவனிடம் ஆற்றுப் படுத்தப் பட்டேன். இனி எனக்கென்ன குறை. யான் பெற்ற பேறு யார் பெறுவார்?'' என்று மகிழ்ந்து திருநீல நாயகியார் திருச் சந்நிதியில் வந்து நின்று கண்ணீர் அருவி சோர, அம்மையின் கருணையை வியந்து, தோத்தரித்துக் கொண்டு, கங்குல் எல்லை காண்பளவும், இமை கொட்டாது நின்றார்.

சூரியன் குணதிசையில் தோன்றினன். ஸ்தானிகர் முதலியோர்கள் கோயிலின் திருக்காப்பு நீக்கி உள்ளே சென்றனர். அம்மை சந்நிதியில் நிற்கும் தாண்ட வரைப் பார்த்தனர். அவர் அங்கிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள் ஸ்தானிகர் முதலியோர். உடனே அவர்கள் தாண்டவரைப் பார்த்து, "நீ இங்கே எப்படி வந்தாய்?'' என்று கேட்டார்கள்.

தாண்டவர்:—யான் நேற்றிரவு பசிக் களைப் பால் வாகனக்கிடங்கில் படுத்துறங்கினேன். யான் அங்கிருப்பதை அறியாமல் கோயிலைப் பூட்டிச் சென்றுவிட்டார்கள். நள்ளிரவில் நித்திரை தெளிந்து அம்மையையும் அப்பரையும் துதித்தேன். அம்மை யார் குருக்கள் மகள் வடிவத்தில் வந்து அடியேனுக்கு உணவருத்தி உபதேசமும் செய்தார்.

ஸ்தானிகர் முதலியோர் இதைக் கேட்டதும் அளவற்ற ஆச்சரியமுற்றனர். அவர் முகத்தில் ஒரு தனிக் களை பொலிந்தது. சாமான்யமாகத் தாண்ட வரை 'தாண்டவன்' என்று ஒருமையிலேதான் கூப்

பிடுவது வழக்கம். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர், "முத்துத் தாண்டவர்" என்று உபசாரமாக அழைக்கத் தொடங்கினர்.



## தில்லையம்பலவன் திருவருள் பெற்றமை

தாண்டவர், முத்துத் தாண்டவராயினர். திருநீலை நாயகியார் ஆணைப்படி, முத்துத் தாண்டவர், தில்லை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். தில்லையின் எல்லையைக் கண்ட மாத்திரத்தில், கீழே விழுந்து பணிந்து எழுந்து தோத்திரஞ் செய்து, உள்ளே போய், வீதிவலம் வந்து, தில்லை மூவாயிரவர் வாழும் வீதிகளையும் வணங்கி ஆலயத்துட் புகுந்து, சிவகங்கையில் மூழ்கிக் காலை வழிபாடுகளை முடித்துக்கொண்டு ஈர உடையுடன் சென்று திருச்சந்நிதியில் அஷ்டாங்க பஞ்சாங்கத்துடன் பணிந்து எழுந்து துதி செய்தார். அன்பின் மிகுதியால் விதிர் விதிர்த்தார். கைதான் தலைமேற் குவித்துக் கண்ணீர் ததும்பிப் பக்திபரவசராய் நிற்கையில் தில்லைக் கூத்தன் திருவருளால் "பூலோக கயிலாசகிரி சிதம்பரம்" என்று அவண் வந்திருப்பவர்களில் ஒருவர் கூற, அதையே தமது கீர்த்தனைக்குப் பல்லவியாக வைத்துக்கொண்டு ஒரு கீர்த்தனை பாடினார். அதில் பல்லவியும் அநுபல்லவியும் வருமாறு :—

கீர்த்தனம்.

இராகம்.] கல்யாணி [ஜம்பைதாளம்.


பல்லவி.

பூலோக கயிலாசகிரி சிதம்பரமல்லாற் புவனத்தில்
வேறுமுண்டோ

அநுபல்லவி

சாலோக சாமீப சாரூப சாயுச்சிய சபைவாணராநந்தத்
தாண்டவம் புரிவதால். (பூலோககலி)

முத்துத் தாண்டவரின் துதியைக் கேட்ட பொன்னம்பலவன் மகிழ்ந்தான். அவரது தொழுநோய் நீங்குமாறு அருள் புரிந்து ஐந்து பொற்பணம் பஞ்சாக்ஷரப் படியின்மேல் வைத்து, எடுத்துக்கொள்ளும்படி கட்டளையிட்டருளினார். அக்கட்டளையின் படியே தாண்டவர் இறை வைத்த பணத்தையும் எடுத்துக் கொண்டு, தனக்கு நேரிட்டிருந்த தீப்பிணியும் நீங்குமாறு, இறைவனருளியதை எண்ணிமகிழ்ந்தார். பன்முறை வணங்கித் துதிசெய்தார். திருக்கூத்தப் பெருமானைவிட்டு நீங்க மனமிலராய், சிறிது தூரம் போவார். திரும்பிவந்து மீண்டுமொருமுறை பார்த்து நிற்பார். கடைசியில் பிரியாவிடை பெற்றுக் கொண்டு சீர்காழிப்பதி போய்ச் சேர்ந்தார்.



## முத்துத் தாண்டவரும், நடராசப் பெருமானும்,

முத்துத்தாண்டவர் வைகறைப்போதில், துயில் நீத்து, காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, சிதம்பரம் போவார். கோயிலினுட்சென்று, சிவகங்கையில் நீராடி, நடராசப்பெருமான் திருச்சந்நிதிக்குப் போய், என்ன சொல் கிளம்பும் என்று ஆர்வமாய் நிற்பார். எந்தச் சொல் அங்கு தரிசனத்தின் பொருட்டு வரும் அன்பர்கள் வாயிலிருந்து வருகின்றதோ அந்த சொல்லையே பல்லவியாக வைத்துக் கொண்டு, கீர்த்தனமாவது பதமாவது பாடி, சிதம்பரநாதன் சித்தப்படி அவன் தருகின்ற ஐந்து பணத்தையும் பெற்று மகிழ்வார். ஒரு நாள் சிற்சபைக்கெதிரில் வந்து நிற்கும்போது, சபாநாதர் இச்சையின்படி, அங்குவந்த தொண்டர்கள் யாதொன்றும் பேசாது மௌனமாய் இருப்பதையறிந்து, முத்துத்தாண்டவர் கீழ்க்கண்ட கீர்த்தனையைப் பாடினார்:

இராகம்:தோடி ] [ ஆதி:தாளம்.

பல்லவி.

பேசாதே நெஞ்சமே பேசாதே.

அநுபல்லவி.

பேசாதே நெஞ்சே பின்சொல்லிப் பேசியுந் தானென்ன கண்டாய்
ஈசர் புலியூரில் வளர் நேசரநுபூதியல்லால் (பேசாதே)

சரணங்கள்.

1. சிங்கார இடை பிங்கலை சங்கார வழிபோகாமல் பொங்கமாகவே நிறுத்தி எங்கள் குருநாயர் பாதம் ஏத்திக்கோ மனத்தைத் தேற்றிக்கோ! அருளைக் காத்துக்கோ! அஞ்செழுத்தையும் போற்றிக்கோ! நானென்ற சத்தம் (பேசாதே)

2. ஆமையா யைந்துறுப்பையும் ஊமையெழுத் துள்ளிருத்தி, சோமசேகரன் பதத்தை நாமெனக் கருத்துள் வைத்து, நாடிக்கோ! பொருளைத் தேடிக்கோ! முத்தி வழியைக் கூடிக்கோ! ஆனந்தக் கூத்தாடிக்கோ! நானென்ற சத்தம், (பேசாதே)

3. பட்டிப் பசங்களைத்துண்டு கொட்டிலி லடைத்துக் கொண்டு, எட்டெழுத் தருவையுண்டு, பொட்டெனச் செபத்தில் தொண்டு பூண்டுக்கோ! அருளை ஈன்றுக்கோ! நமது ஆண்டவன் தில்லையம்பலத் தாண்டவன் தன்னை நீ கண்டால். (பேசாதே)

இவ்வாறு தில்லைநாதனைத் துதித்து அவன் கட்டளைப்படி பஞ்சாக்ஷரப் படியில் வைக்கப் பெற்ற பணத்தைப் பெற்றுக்கொண்டு சீர்காழிக்குச் சென்றார்.

முத்துத்தாண்டவர், நாடோறும் சீர்காழியி னின்று புறப்பட்டு, சிதம்பரம் வந்து சிதம்பரேசனைத் தரிசித்துக் கீர்த்தனைகள் பாடி, வழிபட்டு வரும் நாட்களில், ஒருநாள் வழக்கம்போல் காழிப்பதி நீங்கி, வரும்போது நடுவில் உள்ள கொள்ளிட நதியில் வெள்ளம் அதிகரிக்கவே, அந்நதியைக் கடக்க முடியாது மனம் வருந்தினார்; சபா நாதரைக் காணும் பேறு அன்று வாய்க்காது போகின்றதே யென்று

மனங்கவன்று, ஏக்கமுற்றுக் கொள்ளிட நதிக் கரையின்மேல் நின்று, சிதம்பரநாதனிருக்குந் திசை நோக்கித் தொழுது கொண்டே கீழ்வருங்கீர்த் தனையைப் பாடினார்:

இராகம்:காம்போதி] [ஜம்பை:தாளம்

பல்லவி.

காணாமல் வீணிலே காலங் கழித்தோமே!

அநுபல்லவி.

சேணுடர் போற்றுந்தில்லைச் சிதம்பர ஸ்தலத்தை
(காணாமல்

சரணங்கள்.

1. சேரன் சோழன் பாண்டியன் இரணியவன்மன் கோபு ரமுஞ் சூரவீரப்ப பூபன் செய்த திருமதில்களும், பாருல கும் போற்றுகின்ற பஞ்சாக்ஷரப் படிகளும் ஆரணங்கள் சூழ்ந்த திருவாயிரக்கால் மண்டபமும், (காணாமல்)
2. கங்கையும் நிறைந்த சிவகங்கையும் படித்துறையும் மங்கை சிவகாமியம்மை வாசல் பணிமண்டபமும் திங்க ளணி திருமூலநாதரருட் சந்நிதியும் பொங்கு செல்வம் போலுயர்ந்த தங்கப் பேரம்பலமும், (காணாமல்)
3. நிர்த்தசபை கனகசபை சிற்சபையின் தரிசனமும் முத்திபெறலாமெனவே மூழுங்குஞ் சின்னத்தொனியும் பத்தர்க்குட் சிறந்த கோவிந்தராசர் சந்நிதியும், சுற்றி அந்துலங்க ரத்ன சொர்ணக் கொடிமரங்களும். (காணாமல்)
4. தில்லை மூவாயிரவர் முனிவர்பெரும் வீதிகளும் அல்லும் பகலும் அளிக்கும் அன்னதானச் சிறப்பும்—சொல்லரிய மடங்களும் சோலைகளும் வாவிகளும் நல்ல திருகூட்டங் களும் நாலுதெரு வீதிகளும். (காணாமல்)

இக்கீர்த்தனையை மனங்கசிந்து தாண்டவர் பாடினார். தில்லையம்பலவன் இரங்கினான். கருணாமூர்த்தியல்லவா? அடியார் கருத்தறிந்து முடிக்கும் ஆண்டவனாயிற்றே! அடியார்க்கெளியனாயிற்றே தில்லைச் சிற்றம்பலவன்! சேரமான் பெருமாளும், சுந்தரரும் கண்டியூர் முதலிய சிவத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு, காவிரியின் வடகரையிலுள்ள திருவையாறு சென்று சுவாமி தரிசனஞ்செய்ய விரும்பினார்கள். அந்நாளில், காவிரி பெருக்கெடுத்து ஓடிற்று. அப்பெருக்கிடையே ஓடங்களுஞ் செல்லா. அக்காட்சி கண்ட நம்பியாரூரர் ஆண்டவனை நினைந்து.

"எதிர்த்து நீந்த மாட்டேன் நான்
எம்மான் தம்மானே,
விதிர்த்து மேனி மழைபொழிய வெள்ளம்
பரந்து நுரை சிதறி,
அதிர்க்குந் திரைக்கா விரிக்கோட்டத்
தையாறுடைய அடிகளோ"

என்று பாடினார். ஆண்டவனருளால் காவிரி பிரிந்து வழிவிட்டது. பின்னிருவரும், ஐயாறு சென்று கோயிலில் அம்மை அப்பரை வணங்கினர். அது போல முத்துத் தாண்டவர் அருட் பாடலுக்கிரங்கி அருளிய ஆண்டவன், கொள்ளிட நதி விலகுமாறு அருள் புரிந்தான். அவர் நதியைக் கடந்தார். ஆனந்தங் கொண்டார். அவ்வானந்த மிகுதியால்

"தரிசனஞ் செய்வேனே முத்தி
கொடுக்கும் திருவடம்பலவாணேசனை"

என்ற கீர்த்தனையைப் பாடிக்கொண்டே சிதம்பரம் போய்ச் சேர்ந்தார். சிற்சபேசனைக் கண்டார். கண்டதும்,

" கண்டபின் கண் குளிர்ந்தேன் ஜனனக்
கடலைக் கரைகடந்தேன் "

என்னும் கீர்த்தனையைப் பாடியருளினார்.



## மாணிக்கவாசகர் பேறு, தாண்டவம் பெற்றமை

ஒருநாள் முத்துத் தாண்டவர் வழக்கம்போல், காலையில் சிதம்பரம் சென்று நடராசனைத் தரிசித்து, மாலையில் சீர்காழிக்குத் திரும்பியதும் ஒரு வயல் வழியே குறுக்காக வந்துகொண் டிருக்கும்போது, ஒரு நாகப்பாம்பு இவரைத் தீண்டிற்று. நாகாபரணனின் தொண்டர் முத்துத்தாண்டவர். ஆலகால விஷ முண்டவன் அடியார், அவரை இந்த நாகத்தின் விடமென் செய்யும்? உடனே தில்லையம்பலவனை நினைந்து கீழ்க் கண்ட கீர்த்தனையைப் பாடி யருளினார்.

இராகம் மோகனம்] [ஏகதாளம்

பல்லவி.

அருமருந்தொரு தனிமருந் தம்பலத்தே கண்டேனே

அநுபல்லவி.

திருமருந்துடன் பாகமருந்து தில்லையம்பலத் தாடுமருந்து
இருவினை யறுக்குமருந்து ஏழையடியார்க் கிரங்குமருந்து
(அருமரு)

சரணங்கள்.

1, கொன்றை தும்பை யணிந்த மருந்து கோவைமீதில் படர்ந்த மருந்து,
மன்றுளே நின்றாடு மருந்து மாணிக்கவாசகர் கண்ட மருந்து (அருமரு)

2 இந்திரரானவர் வானவர்தாமு மிருடிகள்தமக் கெட்டா மருந்து,
சந்திர சூரியர் காணுமருந்து தானேமுளைத்துத் தழைத்த மருந்து (அருமரு)

3. திரித்தி தித்தியென்றுடு மருந்து தேவாதி மூவர்கள் காணுமருந்து,
கருத்தைத் திருத்தி யிருத்து மருந்து காலனைக் காலால் உதைத்த மருந்து! (அருமரு)

இக் கீர்த்தனையைப் பாடி முடித்தவுடன் விஷம் இறங்கிற்று. சீர்காழிக்குப் போய்ச் சேர்ந்தார்.

இவ்விதம் சில காலம் சிதம்பரஞ் சென்று நடராசப் பெருமான் பேரில் பல கீர்த்தனைகள் பாடி வருவாராயினர். எல்லாருக்கும் பொருள் எளிதில் புரியக்கூடிய கீர்த்தனைகள். மனமுருக்கும் பாசுரங்கள். நாயக நாயகி பாவத்தில் சில பதங்களும் பாடியுள்ளார். முதுமை வந்துற்றது, முத்துத் தாண்டவருக்கு. இவ்வுலகை விட்டு இறைவன் திருவடிப் பேற்றை விழைந்தார். மணிவாசகருக்குக் கிடைத்த அருவ முத்தியை விரும்பினர் ஆகவே ஆண்டவனிடஞ் சென்று,

இராகம்: ஆரபி] [ஏக தாளம்

பல்லவி.

"மாணிக்கவாசகர் பேறெனக்குத்தர வல்லாயோ அறியேன்"

அநுபல்லவி.

காணிக்கையாகக் கொடுத்தே னுனக்கென்னை
ஆணிப் பொன்னே தில்லை அம்பலவாணா! (மாணி)

சரணங்கள்.

1. நோயும் வறுமையும் சண்டையிடாதே நோக்கரை நோக்காக நோக்கிவிடாதே
தாயுந்தமருஞ் சலித்துவிடாதே சந்நியில் வையாதே ஆயுமிளம்பிறை சூடிய
மூர்த்தி யத்துவித முத்தி புத்தியளித்துத் தியுமறுமை யெதிர் நின்றுதன்னுஞ் சிற்சபை மந்திர சிதம்பரதேவா (மாணிக்க)

2. கட்டிலைவிட்டுக் கிடத்துமென்னாதே காலைக்கரங்களைக் கட்டுமென்னாதே,
கொட்டி முழக்கிட்டு கூகூவென்னாதே! கோரணிக் கொள்ளாதே, எட்டியொருவர் புலம்பவராதே,
ஏழைப் பிணத்தை யெடுமென்றிடாதே! சிட்டர்தொழுந் திருக்கட்டளை மேவுஞ் சிதம்பரதேவா திருநடராயா (மாணிக்க)

3. கட்டையின்மேல் வைத்துச் சுட்டுவிடாதே! கள்ளக்குழியில் புதைத்து விடாதே,
பட்டும் பணியுந் தரித்தயலோர் வந்து பாலள்ளிக்குத் தாதே,
இட்டியொருவர் சடங்குசெய்யாதே கேட்டவரெல்லாங் கிடைக்கத் தருமென்னச்,
சிட்டிப்பவன் பணி சிற்சபைமேவுஞ் சின்மயரூபா சிதம்பரநாதா (மாணிக்க)

4. அப்பரும் லிங்கத் தடைந்தனரென்றும் ஆரூரர் வெண் கரியேறினர் என்றும்,
செப்பரிய திருஞானசம்பந்தர் தேசுடன் சென்றாரென்றும்,
இப்படியென்னை யலைத்துவிடாதே எம்மானிருந்தபடியே விருந்திடச்,
செப்பவருவீர் நடம்புரிமேவுஞ் சிதம்பரதேவர் சிவகாமி நேயா. (மாணிக்க)

5. சிற்பரதற்பர மெய்ப்பொருளுங் கண்ட சித்தரெல்லா
 ரும் நிறைந்து தரிசிக்கத்,
 தற்பதமாம் காலாஞ் சத்திநிபாதமும் சாயுச்சியமும்
 பெறவே,
 பொற்பூமாரி யிமையோர் சொரிந்திடப்பொன் னூச
 லாடுந்திரு வாதிரைநாளில் கர்ப்பூர
 தீபம்போ லென்றனுடலைக் கனகசபையில் கலந்து
 கொள்வாயே. (மாணிக்க)

என்று பாடிமுடித்தார். வேண்டிய வேண்டியாங்கு அளிப்பவனல்லனோ நமது நடராசப்பெருமான்! கருத்தறிந்து முடிப்பவனல்லனோ கண்ணுதற் பெருமான்! அடியார் வேண்டத்தக்கது அறிவானல்லனோ! வேண்டமுழுது நீ தருபவனல்லனோ!

முத்துத் தாண்டவர் விருப்பப்படியே, சிற்சபையில் ஒரு சோதியுண்டாயிற்று. அச்சோதியில் தாண்டவர் கலந்து மறைந்தார்.

வாழ்க முத்துத் தாண்டவர்.
வாழ்க பொன்னம்பலவன்.

இவர் இருந்தகாலம் 18-ம் நூற்றாண்டாகும்.

# கனகதாசர்

# வாழ்க்கை வரலாறு

## 1

### பெற்ரோர்கள் வரலாறு

பம்பாய் மாகாணம், தார்வாட ஜில்லா, பங்கா புரதாலுகாவைச் சேர்ந்த 'பாட' என்னும் கிராமம் ஒன்று உள்ளது. அவ்வூரில் ஆட்டிடையர் குலத்தில் வீரையாக்கௌண்டன் என்பவர் இருந்தார். குலத் துக்குரிய முறையில் நிறைய ஆடுகள் வைத்திருந்தார். பயிர் தொழில் புரிவதற்கு வேண்டிய நன்செய் புன் செய் நிலங்கள் நிறைய அவருக்கு உண்டு. அவ்வூரி லிருந்த கௌண்டர்களில் அவரே முக்கியஸ்தர். நாடு என்னும் கிராமச்சங்கத்திற்கு நாயகப்பதவியுந் தாங்கி வந்தார். அவரிடம் ஏனையோரெல்லாரும் மிகமரியாதையுடன் நடந்துவந்தனர்.

அவருக்குப் பச்சையம்மாள் என்பவள் மனைவி யாக வாய்க்கப் பெற்ருள். இவள் நற்குணவதி. கண வனும் மனைவியும் கருத்தொருமித்து வருவிருந்தினர் கள் மனங்கோணுமல் உபசரித்து, இல்லறதருமம் இனிது நடத்திவந்தனர். நிறையச் செல்வமிருப்பினும்

இருவரும் பணிவு என்னும் பெறலரும் பணி பூண்டு விளங்கினார்கள். கடவுட்பக்தி, அடியார் பக்தியில் மிக்கு விளங்கினர். யாரிடமும் மனம் நோக நடப்ப தில்லை. பரோபகாரச் சிந்தையுடையவர்கள். பிறர் மகிழுமாறு செய்வதே உண்மையான கடவுட்பூசை என்றுணர்ந்து அவ்வாறே நடந்து வந்தனர்.

வீரையாக் கௌண்டர், நாகரிகம் படைத்தவர். மானத்தைப் பெரிதாக மதித்து நடப்பவர். மரியாதை யின் மேன்மையறிந்தவர். இப்படி இருந்து வரும் நாளில் இறைவனருளால் "ஆனெகொந்தி" என்னும் சம்ஸ்தானத்தரசர் வீரையாக் கௌண்டரை அழைத்து, தம் அரண்மனையில் ஓர் அதிகாரியாகச் செய்தார். இடையர் குலத்துதித்த இவரது சீலத்தைப் பார்த்து, ஸ்ரீனிவாஸாசாரியார் என்னும் வைணவ வேதியர் ஒருவர், இவருக்குச் சங்குசக்கர முத்திராதா ரணம் செய்தார். அது முதல் கௌண்டர் வைணவமத சம்பிரதாயத்தை அனுஷ்டித்து வந்தார். திருப்பதி வேங்கடேசப் பெருமாளைத் தன் குல தெய்வமாகக் கொண்டார்.

திருப்பதிப் பெருமான் திருவருள் பெற்றது.

வீரையாக் கௌண்டருக்கும், பச்சையம்மாளுக்கும் நிறையச் செல்வமிருந்தும், சிறந்த பதவியிருந்தும், மக்கட் செல்வமில்லாக் குறையால், மனத்தில் பூரண சந்தோஷமில்லை. போதாக்குறைக்கு, இருவரும் முதுமைப் பருவத்தை எட்டிப் பார்க்கும் நிலையிலிருந்தனர்.

'பொன்னுடையரேனும் புகழுடையரேனுமற்
றென்னுடையரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக் கைப்பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங்கில் லாதவர்''

என்று புகழேந்திப் புலவர் கூறியாங்கு, என்ன செல்வமிருந்தும் மக்கட் செல்வமின்றேல், வாழ்க்கை சிறவாது. அன்பு வளருதற்கு இடமிராது. வீரையாக் கௌண்டரும், அவர் மனைவியும் புத்திரனில்லாக் குறையால் மிகக் கவன்றார்கள். இருவரும் திருப்பதி சென்று வேங்கடரமணனைத் தரிசித்துவர எண்ணினர்.

ஒரு நன்னாளில் இருவரும் மஞ்சள் உடையுடுத்துக்கொண்டு, கோவிந்தநாம சங்கீர்த்தனம் புரிந்து கொண்டு, திருப்பதி சென்று, வேங்கடாசலப் பெருமானைக் கண்ணாரக் கண்டனர். அவன் கழல் தலையார வணங்கினர். நெடியோன் நின்ற நிலைகண்டு,


கண்கள் செய்த பாக்கியமென்று, அவனையே பார்த்த வண்ணமாய் வெகுநேரம் அங்கே நின்றனர். "கரிய வனைக் காணாத கண்ணென்ன கண்ணே, கண்ணி மைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே" என்று இளங்கோவடிகள் கூறியபடி, கண்படைத்த பலன் கரியவனைக் காண்பதே யென்றுணர்ந்தார் போல் கௌண்டரும் அவர் மனைவியும் அவனது அழகில் ஈடுபட்டனர்.

சில நாட்கள் அங்கேயே தங்கிப் பாபநாசம் முதலான புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து திருவேங்கடத்தானை முறையே வணங்கி வழிபாடாற்றி வந்தனர். அப்படிச் சில நாட்கள் அங்கு கழிந்தன. அங்கு இருக்கு நாளில், ஒருநாளிரவு கௌண்டர் கன வில் திருப்பதிப் பெருமான் தோன்றி கையில் வைத் திருந்த பிரசாதத்தை நீட்டி, "அப்பனே, இதோ பிர சாதமிருக்கின்றது. இப்பிரசாதத்தில் நீ பாதி, உன் மனைவி பாதி அருந்துங்கள். உங்கட்கு ஓர் ஆண்மகவு தோன்றும்" என்று கூறி மறைந்தான.

கௌண்டர் துயில் நீத்து எழுந்து பார்க்கையில் கனவிடைப் பெருமான் கழறிய பிரசாதம் இருக்கக் கண்டு, ஆச்சரியப்பட்டார். அளவற்ற ஆனந்தங் கொண்டார். உடனே தன் மனைவியை எழுப்பி நடந்த விஷயத்தைத் தெரிவித்தார். அவ்வம்மை யாரும் அளவற்ற மகிழ்ச்சியடைந்தார். இருவரும் அந்தப் பிரசாதத்தைப் பரிசுத்தமான ஓரிடத்தில் வைத்துவிட்டுக் காலைக்கடன் முடித்து, புஷ்கரணி

தீர்த்தத்தில் மூழ்கி, வேங்கடாசலபதியைத் தரிசித்து அப்பிரசாதத்தை இருவரும், அருந்தி மகிழ்ந்தனர்.

இரண்டொரு நாட்கள் அங்கிருந்து ஏழுமலையானைத் துதித்து அவனிடம் விடைப்பெற்று, கௌண்டரும், அவர் மனைவியும், தம்மூர் திரும்பினர்.




## 3
## புத்திரப் பேறு.

பச்சையம்மாள், திருப்பதிப் பெருமான் பிரசாத மகிமையால், கருவுற்றாள். ஒன்பது திங்களும் நிரம்பின. பத்தாந் திங்கள் பச்சையம்மாள் இளஞ் சூரியனை யொத்த ஓர் ஆண்மகனை ஈன்றாள். பிறந்த வருஷம் 1509 அல்லது 1510 என்று கூறுவர் அறிந்தோர். வீரையாக் கௌண்டருக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. தமது வீட்டில் பெரியதோர் விழாக் கொண்டாடினார். தினந்தோறும் பல தானங்கள் புரிந்தார். பலருககு அன்னதானம் சொர்ண தானம் புரிந்தார். பத்தாம் நாளில் பாலனைத் தொட்டிலில் போட்டு, பேரிடும் விழாவையும், மிகச்சிறப்பாக நடத்தினார் கௌவுண்டர். திருப்பதி வேங்கடேசனுக்கு 'திம்மப்பன்' என்ற ஒரு பெயருண்டு. அவனது கருணைப்பிரசாதம் உட்கொண்ட பின் இம்மகன் பிறந்தமையால், இவனுக்குத் தாய் தந்தையர்கள், திம்மப்பன் என்ற பெயரையேயிட்டு மகிழ்ந்தனர்.

திம்மப்பன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய், வளர்ந்து வந்தான். இது காறும் மக்களின் மழலைச்சொல் கேட்டறியா, கௌண்டரும், பச்சையம்மாளும், திம்மனது மழலைச் சொல்லைக் கேட்டு மகிழ்ந்தனர். "குழலினிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச் சொற் கேளாதவர்" என்ற வள்ளுவர் வாய் மொழிப்படி, பெற்றோர்கள் குதலை மொழி, கேட்டு, குறையாத இன்பம் எய்தினர்.

திம்மன் மற்றக் குழந்தைகளைப் போலல்லாமல் "விளையும் பயிர் முளையிலே மிகும்" என்ற முது மொழிப்படி தனிப்பட்டமுறையில் அவன் ஆடிப் பாடுவான். பிற்காலத்தில், சிறந்த தாசனுவான் என்பதற்குரிய அறிகுறிகள் அவனிடம் காணப் பெற்றன. சில சமயங்களில் தனியிடத்தை அடைவான்; தெய்வத்தைத் தியானித்த வண்ணமிருப்பான். அவனது நாமங்களைக்கூறி பஜனை செய்வான். மற்றக் குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு, அவர்கள் மத்தியிலிருந்து, எல்லாரையும் பஜனை செய்யுமாறு செய்வான்.



# 4

## திம்மனின் முற்பிறப்பு.

சிறு குழந்தைகள் சாதாரணமாக வேடிக்கையாகப் பொழுது போக்குவதில் பிரியமுள்ளவர்களாய் இருப்பார்கள். ஆனால், பூர்வஜன்ம வாசனையாலும், தெய்வாநுக்கிரகத்தாலும், திம்மன், இளமையிலேயே இறை வழிபாட்டில் ஈடுபட்டான் என்று தெரிகின்றது. திம்மனைப் பற்றிய பூர்வ ஜன்ம வரலாறு ஒன்று கூறப்பட்டுள்ளது. அதை இங்கே அறிவது அதசியம்.

"ஆணிமாண்டவியர் என்னும் ஒரு ரிஷி ஒரு காலத்தில், ஒரு விநாயகராலயத்தில், விநாயகரின் பின் புறத்தே, நிம்மதியாக உட்கார்ந்து, நிஷ்டை கூடி இருந்தார். அவ்வாலயத்தருகே அவ்வூர் அரசனது அரண்மனை இருந்தது. சில திருடர்கள் அவ்வரண் மனையில் திருடுவதற்காகச் சென்றனர். செல்லும் போது, வழியிலிருந்த விநாயகரிடம் சென்று பிரார்த் தித்து, தங்களுக்கு அரண்மனையில் நிறைய களவாடு வதற்குப் பொருள்கள் கிடைக்குமானால், திரும்பிப் போகும்போது, களவுப் பெருள்களில் சிறந்த தொன்றை அவ்விநாயகருக்குக் கொடுப்பதாக வேண்டிக்கொண்டு, அரண்மனைக்குள் நள்ளிரவில் நுழைந்தனர். விலையுயர்ந்த பல பொருள்களை, திருடர்கள் களவாடினார். காவலாளிகள் அந்நேரத் தில் சற்று உறங்கியிருந்தனர். களவு முடியுந்தறு வாயில் காவலாளர்களில் சிலர் விழித்துக்கொண்டு

திருடர்களைப் பிடிக்க நெருங்கும்போது, அவர்கள் ஓட ஆரம்பித்தனர். அவர்களைக் காவலாளிகள் பின் தொடர்ந்து ஓடினர். திருடர்கள் விநாயக ராலயத்தின் வழியே ஓடும்போது, அவர்கள் அவ்வாலயத்தின் முன், பிரார்த்தித்தபடி, தாங்கள் திருடியவற்றுள் விலையுயர்ந்த, முத்துமாலை யொன்றை யெடுத்து, நிதானமாய்க் காணிக்கையாகச் செலுத்த முடியவில்லை. காவலாளிகள் பின் தொடர்ந்து வந்ததால், திருடர்கள் பிரார்த்தனைப்படி, ஒரு முத்து மாலையை விநாயகர்மேல் வீசி யெறிந்துவிட்டு ஓடி விட்டனர்.

கள்வரால் வீசி யெறியப்பட்ட முத்துமாலை, விநாயகர் கழுத்தில் விழாமல், அவர் பின்புறத்தே நிஷ்டையிலிருந்த ஆணி மாண்டவிய மகரிஷியின் கழுத்தில் விழுந்தது. அவர் அதையறியாமல் நிஷ்டையிலிருந்தார். திருடர்களைத் துரத்திச் சென்ற காவலாளிகள், விநாயகராலயத்தில் திருடர்கள் ஏதோ ஒன்றை வீசி யெறிந்ததைக் கவனித்து விட்டார்கள் உடனே அக்கோயிலினுள் நுழைந்தனர் காவலாளிகள் முத்துமாலை மஹரிஷி கழுத்தில் விளங்குவதைக் கண்டார்கள்.

மஹரிஷியை மாபெருங் கொள்ளைக்கூட்டத் தலைவராக எண்ணினர் காவற்காரர்கள். உடனே அவரைப் பிடித்திழுத்துக்கொண்டு சென்று அரசர் முன்னிலையில் நிறுத்தினார்கள். சமாதியிலிருந்த வராதலால் ஆணிமாண்டவியர் நடந்தது ஒன்றும் அறியாராய் மௌனமாய் நின்றார். அரசன், அவரைக்

கொள்ளைக் கூட்டத் தலைவரென்று தீர்மானித்து அவரைக் கழுகுமரத்தில் ஏற்ற, காவலாளிகட்கு உத்தரவிட்டான். காவற்காரர்கள் அரசனுணைப்படி அவரைக் கழுவேற்றினூர்கள்.

உலகில் நடக்கும் சிக்ஷை ரக்ஷைகட்கு யமதருமராஜனே காரணன். ஆதலால், மகரிஷி அவனை யழைத்து, தனக்கு அத்தகைய தண்டனை கிடைக்கக் காரணமென்ன என்று கேட்டார். யமதருமராஜன் அதற்கு, "நீ இளம் பிராயத்தில், ஒரு தும்பியின் வாலில் ஒரு வைக்கோல் துரும்பைச் செலுத்தி அதைப் பறக்கவிட்டு வேடிக்கை பார்த்தாய். அதன் பயனுய், இப்பொழுது இத்தண்டனை உனக்குக் கிடைத்தது" என்றுன்.

அதற்கு ரிஷி "குழந்தைகள் புத்தியின்றி செய்யுங் குற்றங்கள் மன்னிக்கததக்கன. அங்ஙனமின்றி நீ இங்ஙனம் என்னைத் கண்டித்தது தவறு. ஆகவே பூலோகததில், இரு பிறவிகள் எடுப்பாயாக" என்று சாபங்கொடுத்தார் அந்தச் சாபப்படி, விதுரனுயும், கனகதாசராயும், தருமராஜன் பிறந்து விஷ்ணுவைத் தொழுது, சாபவிமோசனம் பெற்றுன். இவ்வரலாறு ஸ்ரீமதவாசாரியர், மஹாபாரததாத்பரிய நிர்ணயத்தில் சொல்லியிருக்கிறுர்.

## 5

### திம்மன் கனகனானமை


திம்மனுக்கு வயது ஐந்து நிரம்பிற்று. அவனுடைய தந்தை இவ்வுலக வாழ்வைநீத்து விண்ணுலகெய்தினர். பச்சையம்மாளுக்குச் சகிக்கொணாத் துயரம் ஏற்பட்டது. தன் மைந்தன் பொருட்டு உயிர் தரித்திருந்தாள்.

தந்தை பிறந்த பிறகு திம்மன், தன்னிஷ்டப் படித்திரிய ஆரம்பித்தான். தாயின் வார்த்தையைக் கேட்பதில்லை. "தந்தையொடு கல்விபோம் என்பதற்கிணங்க, திம்மன் கல்வி புகட்டுவாற்றுன். முதலில் இருந்தாற்போலத் திம்மன் இருக்கவில்லை. மாறுதல் ஏற்பட்டது. இவ்வாறிருக்கும்போது ஒரு நாள், பச்சையம்மாளும் இறந்துவிட்டாள்.

தாய்தந்தையர்களை இழந்த திம்மனுக்குப்பருவம் பன்னிரண்டிருக்கும். குடும்ப பாரம் முழுதும் அவனுக்கு ஏற்பட்டது. அவ்வூரில் உள்ளவர்கள் அவன் தாய் தந்தையற்றவன் என்று பிரிவு காட்டினார்கள். அவனது யோகத்தின் பயனோ என்னுமாறு, அவன் மண்ணைத் தொட்டாலும் பொன்னாக மாறும். எதைப் பார்த்தாலும் அவன் கண்களுக்குக் கனக மயமாய்த் தோன்றும். மற்றவர்கள் கண்களுக்கு வெறும் பாத்திரங்களாயிருப்பவை, திம்மன் கண்களுக்கு, தங்க நாணயங்கள் நிரம்பியவைகளாய்த் தோன்றும். ஒரு முறை ஏழு

கொப்பரைகள் (அண்டாக்கள்) நிறைய தங்க நாணயங்கள், அவனுக்கு அதிருஷ்ட வசமாய்க் கிடைத்தன. அவற்றை யெல்லாம் தனக்கென வைத்துக் கொள்ளாமல் திம்மன் ஏழை மக்கட்கு வாரி வழங்கி அவர் இன்முகங் கண்டு களித்தான். ஈத்துவக்கும் இன்பம் அறிந்தவன் திம்மன்.

ஈகைக் குணம் பிறவிக்குணமாகும். திம்மன் நடை நடக்கப் பழகும் போதே கொடை கொடுக்கப் பழகினான். கனகம் இவனிடம் நிறைய இருந்தமையாலும், எப்பொருளும், இவன் கண்களுக்கு, கனகம்யமாய்க் காணப் பெற்றமையாலும், இவனுக்குக் கனகன் என்ற பெயர் ஏற்பட்டது.



## 6

### இல்லற வாழ்க்கை

கனகன் பணத்தால் மட்டும் கனகனுகவில்லை. குணத்தாலும் கனகன் ஆனுன். இளமையில் சுதந்தரமாக ஓடி ஆடி உடல் வளம் பெற்ருன். பதினுறு வயதுள்ள காளையாய் விளங்கினுன். முகத்தில் நல்ல களை வாய்க்கப் பெற்ருன். இயற்கை அன்னையின் மடிமேல் வளர்ந்தான். பரந்த நெற்றியும் பெருத்த தோள்களும், வாய்க்கப்பெற்ற கனகன் நல்ல வீரனுக விளங்கினுன். களங்கமற்றவுள்ளமும், பரோபகாரச் சிந்தையும், உலகத்தார எல்லாரிடமும் பிரீதியும், விரிந்த நோக்கமும், உண்மை கடைப் பிடித்தல், முதலிய நற்பண்புகளும் கனகன்பால் குடி கொண்டன.

பொய்யர்கள், வஞ்சகர், முதலியவர்களைக் காண நேர்ந்தால் கனகன் கண்டித்துத் துரத்துவான். அவனுக்குக் காட்டில் வேட்டையாடுவதில் அளவற்ற மகிழ்ச்சி. இவ்வாறு கனகன் காலங்கழித்து வரும் நாட்களில், ஒரு நாளிரவு அவன் கனவிடை ஆதிகேசவஸ்வாமி ஒரு வேதியர் வடிவில் தோன்றி அவ்வூரில் ஓரிடத்தைச் சுட்டிக்காட்டி, "ஏ! கனகா! இவ்விடத்தில் ஆதிகேசவ விக்கிரகம் இருக்கின்றது. அதையெடுத்துக் காசி நிலைக்குக் கொண்டு சென்று அங்கு பிரதிஷ்டை செய்" என்று கூறி மறைந்தது.

பொழுது புலர்ந்ததும், கனகன், தன் கனவைப் பற்றித் தன் நண்பர்களிடங் கூறினுன். அவனும்

அவன் நண்பர்களும், ஆதி கேசவஸ்வாமி குறித்த இடத்திற்குச் சென்று, அவ்விடத்தில் தோண்டிப் பார்க்கும்போது, ஆதி கேசவஸ்வாமியின் விக்கிரகம் கிடைக்கப் பெற்றூர்கள். நால்வர் சேர்ந்து தூக்க வேண்டிய அவ்விக்கிரகத்தை, கனகன் தனியாகத் தூக்கிக்கொண்டு, காசி நிலேக்குச் சென்று, அவ்வூராரிடம் நடந்த விஷயத்தைத் தெரிவித்து, அவர்கள் உதவியையும் பெற்று, ஆதி கேசவஸ்வாமியை அவ்வூரில் பிரதிஷ்டைசெய்து, கேசவஸ்வாமிக்குப் பூசை நைவேத்தியங்கள் முட்டின்றி நடை பெற ஏற்பாடுசெய்து திரும்பினுன்.

கனகனுக்கு மணப்பருவம் வந்துற்றது. அவன் சுற்றத்தார்கள் அவனுக்குத் தக்க கன்னியைப் பார்த்து மணம் புரிவித்தனர். கனகன் எல்லாருங் கொண்டாடும்படி நடந்து கொண்டான். தந்தையைப் போன்ற தகவுடையான் என்று மக்கள் புகழ்ந்தனர். இதுகாறும் பிரமசரிய நிலேயில் இருந்த கனகன், இல்லறநிலேயை யடைந்தான். கனகனது குணத்திற்கும், செல்வத்திற்கும், அவனே எல்லாரும் "கனகநாயகன்" என்ற பட்டத்தால் கௌரவித்தனர்.

# 7

## கனக நாயகன் கனகதாசராயினமை

கனக நாயகனது புகழ், 'ஆனைகொந்தி' என்னும் சம்ஸ்தானத்தரசருக்கு எட்டியது. அவர் கனகனை அழைத்து, பங்கா புரப்பிராந்தியத்தை, அவனிடங் கொடுத்து அப்பிராந்தியத்திற்கு அதிபதியாகச், செய்தார். கனகன், இதுவும் ஆதி கேசவ ஸ்வாமியின் அருள் என்றறிந்து மகிழ்ந்து, அம்மூர்த்திக்குப் பெரிய தோர் ஆலயங்கட்டினன். ஆலயத்தைச் சுற்றி பெரிய மதிற் சுவர்கள் எடுப்பித்தான். அக்கோயிலுக்கு, நித்திய நைமித்திக பூசைகளும், ஆண்டுவிழா, திங்கள் விழா, முதலிய விழாக்களும், நன்குக நடப்பதற்கு ஏறபாடு செய்தான். அன்னதானம், சொர்ணதானம், வஸ்திரதானம், முதலியதானங்கள் செய்வித்தான்.

கனகன் இவ்வாறு பலர் கொண்டாட வாழ்ந்து வருங்கால், அப்பிராந்தியத்திலுள்ள மக்கள் அனை வருக்கும் திருப்பதிப் பெருமானருளால், கனவு ஒன்று ஏக காலத்தில் ஏற்பட்டது. அக்கனவில் வேங்க டேசன், "திருப்பதியில் கொணர்ந்து செலுத்த வேண்டிய காணிக்கைகள் எல்லாவற்றையும், இனி மேல் கனகனிடம் செலுத்தலாம்" என்று கூறினன்.

இக் கனவு எல்லாருக்கும் ஆச்சரியத்தையுண்டு பண்ணிற்று. கனகனும் ஆச்சரியப் பட்டான். எல்லாரும் காணிக்கைகளை கனகனிடங் கொணர்ந்து செலுத்த வாரம் பித்தனர். கனகன், திருப்பதிப் பெருமான் திருவிளையாடல்களில் இஃதொன்ருகும்

என்று எண்ணி, தன்னிடங் கொணர்ந்து செலுத்தப் படுங்காணிக்கை யனைத்தையும் திருப்பதிக்கு அனுப்பி வந்தான்.

கனகன் இங்ஙனம் சிறப்புற வாழ்ந்து வருவது ஒரு சிலருக்கு பொருமையை உண்டு பண்ணிற்று. அதன் பயனுக, அவர்கள் ஆனெகொந்தி மஹாராஜருக்கு, கனகன் இராச்சியத்தின் வருவாய் அனைத்தையும் வீண் ஆடம்பர விஷயங்களில் செலவு செய்கின்றுன் என்று எழுதியனுப்பித்தார்கள். அரசன் தீர விசாரியாமல் உடனேகனகனை அப்பதவியின்றும் நீக்கினுர். பங்காபுர அரசாங்கத்தையும் எடுத்துக்கொண்டு விட்டார்.

உடையமன் ஆதலால், அரசபதவி நீங்கியதற்கு மனம் வருந்தாதவனுய், அவ்வூரையும் விடுத்து, காசிநிலேக்குச்சென்று குடியேறினுன். அச்சந்தர்ப்பத்தில் அவன் மனைவியும் காலமானுள்.

காதலியுயிர் நீத்தபின்னர், கனகன் கட்டுப் பாடற்றவனுயினுன். காட்டில் கொடிய விலங்குகளே வேட்டையாடிக் கொன்றுன். வேட்டையில் மிகுந்த வேட்கையுடையனுயினுன். வேட்டைக் கென வேட்டை நாய்கள் பல கொணர்ந்து வளர்த்து வந்தான்.

இங்ஙனம், கனகன் வேட்டையாடி வீண்காலங் கழித்து வருநாட்களில் ஒரு நாள் இரவு அவன் கனவிடை ஆதிகேசவஸ்வாமி தோன்றி, "ஏ! கனகா! இது ஏது கையில் சுணங்கன்! ஏன் பொய்மையே

பெருக்கிப் பொழுதினைச் சுருக்குகின்றாய்? எனது தாசனாக நீ ஆகாவிடில் விரைந்து சேருவாய் நரகம்" என்று கூறி மறைந்தது. கனகன் துயில் நீத்து எழுந்தான். கனவிடைத் தெய்வங் கூறியதை யெண்ணினான். "இது ஏது! காட்டில் எதேச்சையாய் வேட்டையாடிக் காலம விநோதமாய்க் கழித்து வருகின்ற என்னைக் கையில், தண்டு தாங்கிய தாசனாகச் சொல்லுகின்றதே. நாய்களுடன் உல்லாசமாய் வனஞ்சென்று வேட்டையாடும் சூரனாகிய என்னை, என் அருமை நாய்களை விடுத்து, பைகள் தாங்கி தேசங்கள் பல திரிய வேண்டுமாம்! நன்றாயிருக்கிறது" என்று வாளா இருந்துவிட்டான்.

கனகன் வழக்கம் போல வனவிலங்குகளை வேட்டையாடித் திரிந்து வந்தான். ஒரு நாள் அவன் ஊராருக்கும், பக்கத்தூராருக்கும் எல்லை வழக்கொன்று ஏற்பட்டது. அவ்வழக்கு சம்பந்தமாய், கனகனும், வழக்குப் பேசுமிடத்திற்குப் போயிருந்தான். பேச்சு முதிர்ந்து இருகட்சியார்களும் கைகலந்து சண்டையிட்டனர். கலகம் நடந்து கொண்டிருக்கும் போது ஒரு குதிரை ராவுத்தன் வந்து கனகனை நையப் புடைத்தான். கால்கைகளிலும் முகத்திலும், முதுகிலும், பெருத்த காயங்கள் ஏற்பட்டன. அக்கலகத்தில் கனகன் தோற்று, காயங்களுடன், மனஞ் சோர்ந்து வீடு வந்து சேர்ந்து, படுத்து அயர்ந்து உறங்கி விட்டான். அப்போது, ஒரு கனவு ஏற்பட்டது. அக்கனவில் " ஏ ! கனகா ! உன்னைச் சண்டையில் தோல்வியுறச் செய்தது யாரெனத் தெரியுமா? நான் தான் கிருஷ்ணன். இனியாவது நம்மை வணங்கிக்

கொண்டு தாசனுயிருக்கின்றாயா ? அவ்வாறு தாசனாவதாயிருந்தால், உனது காயங்களை இப்பொழுதே குணப்படுத்துகின்றேன். உனது கஷ்டங்களெல்லாம் நிவர்த்தியாய்விடும்'' என்று கூறவே, கனகன் யாதொரு பதிலும் கூறாமல், கைகால்களை அசைக்கவும் சக்தியற்று, வாயை மாத்திரம் திறந்தான். உடனே, பேசிக்கொண்டிருந்த தெய்வ வடிவம், அவன் சரீரத்தின்மேல் கையை வைத்து தடவியது. பின்னர், அவனது நாக்கை வெளியில் இழுத்து அதில் ''பீஜாக்ஷரங்கள் இரண்டு'' பொறித்து மறைந்துவிட்டது. கனகனும் தூக்கத்தினின்றும் எழுந்தான். எதிரில் யாருமில்லை. ஆனால் தன்னுடலில் இருந்த காயங்கள் மாயமாய் மறைந்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். அவனுக்கு ஞானம் உதயமாயிற்று. யான், எனது என்னும் செருக்கு நீங்கின தன்னுடைய ஜன்மம் தாசனாவதற்கே ஏற்பட்டதை யறிந்தான்.

ஆண்டவன் இரண்டு மூன்று தடவைகள் கனகனைத் தன் வசப்படுத்த முயன்று முடியாமற் போய், கடைசியில், தன்பால் ஈர்த்தாட் கொண்டது, அவனது பூர்வ ஜன்மத்தின் புண்ணியமே. அந்த நிமிஷமே எல்லாவற்றையும் விட்டுவிடத் தயாராகினான். தனது ஜன்மம் கடைத்தேறிற்று என்று மகிழ்ந்தான். கனக நாயகன் என்னும் பட்டம் போய்விட்டது. கனகதாசர் என்ற பட்டம் ஏற்பட்டது.

கனகதாசர் வியாசராயர் மடம் சேர்ந்தது.

கனகதாசர் பகவானது கருணையை நினைந்து மகிழ்ந்தார். தமது குலதெய்வத்தை வாயாரப் புகழ்ந்தார் "உய்ந்தேன்! உய்ந்தேன்! உய்ந்தேன் பிறவிக் கடல் கடந்தேன். பதும நாபன் பாதத்துணை எனக்குக் கிடைத்தது" என்ற கருத்துள்ள பதம் பாடினார். இதுவே முதன் முதல் இவர் பாடிய பதமாகும். பதம் என்பது இங்கு இவரது பாடலைக் குறிக்கின்றது. பதம், கீர்த்தனை, பாடல், என்பன ஒரு பொருளைக்குறிக்கும் பலசொற்கள். ஆண்டவன் அவரது நாவினில் "பீஜ அக்ஷரங்கள்" பொறித்தமையால், கலைஞானமும், கவிதா சக்தியும் ஒருங்கே வாய்க்கப் பெற்றார். பீஜாக்ஷரங்கள் இரண்டென்றும், சகல வித்தைகளுக்கும் மூலமாயுள்ள இரண்டெழுத்துக்கள் என்பது பொருளாகும். இங்கு "ராம" என்னும் தாரக மந்திரத்தைக் குறிக்கும். இதுவே ஞானோபதேசமாகும்.

கனகர் ஞானோபதேசம் பெற்றவுடன், அதுகாறும் தமது என்று கருதியிருந்த செல்வமனைத்தையும், "காதற்ற வூசியும் வாராது காண் கடைவழிக்கே" யென்றுபதேசிக்கப் பெற்ற திருவெண்காடர், எப்படித் துறவு பூண்டாரோ, அப்படியே எல்லாவற்றையும் நீத்துத், துறவு பூண்டார். தமது ஆஸ்தியனைத்தையும், ஏழைகளுக்கும், வேதியருக்கும் தானமாகக் கொடுத்தார். வீட்டை விட்டுப் புறப்

பட்டார். சமீபத்தில் வசித்து வந்த ஸ்ரீ வைணவப் பெரியராகிய தாத்தாசாரியார் என்பவரை அடுத்து. "சின்முத்திரை" (ஞானோபதேசம்) பெற்று ஆண்டவனின் புகழைப் பாடல்களில் அமைத்துப் பாடவாரம்பித்தார். உலகினர் அறியும்படி ஒரு குருவிடம் சென்றார் போலும் கனகர்.

சில நாட்கள் கழிந்த பின்னர், தாசர் தமது குல தெய்வமான ஸ்ரீ வேங்கடரமணஸ்வாமியைத் தரிசிக்க விரும்பினார். உடனே புறப்பட்டார். உடற்பற்று விட்ட உத்தமராதலால், உடல் நலத்தைப் பற்றியோ, உடலழகைப் பற்றியோ, அவர் சிறிதும் கவலை கொள்ளவில்லை. நின்றும் இருந்தும் கிடந்தும் சென்றும் என்றும் அரிநாம சங்கீர்த்தனம் புரிந்து கொண்டிருந்தார். கிழிந்த துணிகள், குப்பைத் துணிகள். அவர் உடலை மறைத்தன. அழுக்கு மெய்யோடு திரிந்தார். தாடியும், சடையும் தாமே வளர்ந்தன. நாவின் தன்மையாகிய ருசி பார்த்தலை விட்டார். கண் முன்னின்றதை, கையிற் கிடைத்ததை புசித்தார். இந்நிலையில் திருப்பதிப் பெருமானைக் காணும் ஆசை அவர் பிடர் பிடித்துத் தள்ளியதால், கையில் தம்பூரி யொன்று எடுத்துக்கொண்டு கால் நடையாய், அரிநாம சங்கீர்த்தனைகளை வழி நெடுகப் பாடிக்கொண்டு, திருப்பதி நோக்கிப் புறப்பட்டார்.

கனகதாசர், வழியில் கல்லையும் முள்ளையுங் கவனியாராய், மெய்வருத்தம் பாராராய், பசிநோக்காது, பசியால் வருந்தி, மழையில் நனைந்தும், வெயிலால்

உலர்ந்தும், திருப்பதிப் பொருமானைத் தியானித்தும், அவனது பெருமைகளைப் பாடிக்கொண்டும் திருப்பதி போய்ச் சேர்ந்தார். பூலோக வைகுண்டாதிபதியைக் கண்டார். அவர் கரங்கள் தாமே தலைமேற் குவிந்தன. கண்ணீர் அருவி பாய்ந்தது. நாக்கு அவரது நாமங்களை உச்சரித்தது. வேங்கடேசன் திருவடியில் அடியற்ற மரம்போல் வீழ்ந்து வணங்கினார்.

தாசர் திருப்பதியிலேயே தங்கி நாடோறும் பெருமானைத் தரிசித்து வந்தார். தாம் வைகுந்தத்தில் இருப்பதாகவே எண்ணினார். உலகில் உள்ள பற்றெல்லாவற்றையும் உதறித் தள்ளிய உத்தமர். மற்றுப் பற்றொன்றுமின்றி பரந்தாமன் பாதமே பாவித்தார். ஆகவே, திருப்பதி வைகுந்தமெனத் தோற்றியதில், வியப்பொன்றுமில்லை. இவ்வாறிருந்து வருநாளில், ஒரு நாளிரவு அவர் கனவிடைப் பெருமான தோன்றி "நீ வியாசராய மடத்திற்குப் போய்ச் சேர்" என்று கூறினார்.

தாசர் விழித்தெழுந்தார். பெருமான் கருத்து இன்னதென அறிந்தார். தாம் திருப்பதியிலேயே இருந்துவிடஎண்ணியிருந்தார். ஆனல் ஆண்டவன் விருப்பம் வேருயிருந்தது. என்செய்வார் தாசர். திருப்பதியை விடுக்க மனமிலர், என்ருலும் பெருமான் கட்டளையை மீறுவதற்கு அஞ்சி, வியாசராயர் மடம் அமைந்துள்ள, சோசலை நோக்கிச் சென்ருர்.

மைசூருக்குச் சுமார் இருபது மைல் தூரத்தில் காவிரிநதியும், கபிலை நதியும் சேருமிடத்தில் சோசலை

யென்னும் ஓர் க்ஷேத்திரம் உண்டு. அங்கு வியாச ராயர் மடம் உளது. பதினாறாம் நூற்றாண்டில் விஜய நகரத்தில் ஆட்சி புரிந்த ஸ்ரீ கிருஷ்ண ராயர், அச்சுத ராயர் காலத்தில் வியாசராயர் என்னும் பெரியார் வாழ்ந்தார். இவரை அவ்விருமன்னர்களும் தங்கள் குருவாக மதித்து வந்தார்கள். இவர் திருப்பதியில் பன்னீராண்டு வேங்கடேசனைப் பூசை செய்து அப்பெருமான் அருள் பெற்றவர். பலகலைகள் பயின் றறிந்த பண்பர். கலைஞானம் கைவரப்பெற்ற ஞானி யாராவர். ஒருமுறை விஜய நகரத்தரசர், குறிப் பிட்ட நேர மொன்றில், சிங்காதனத்தில் வீற்றிருந் தால், தீங்கு நேரிடுமென்று, சாதகத்தில் கிரஹபலன் இருந்தமையால், அந்த வேளையில் சிங்காதனத்தில் வீற்றிருந்து மன்னர்கட்குத் தீங்கு நேராதவாறு தடுத்த மாண்பு மிக்கவர். தாசர்கூட்டம் (அடியார் சபை) என்னும் திருக் கூட்டச் சபையை ஏற்படுத்தி யவர் இவர்.

இக்கூட்டத்தைச் சேர்ந்தவரே புரந்தரதாசர். புரந்தரதாசருக்கும் வியாச ராயர் குருவாய் விளங் கினர். கருநாடக நாட்டிற்கு பக்தி மழை யேற் படுதற்குக் காரணராயிருந்தவர். முற்பிறவியில் இவர் பிரகலாதாழ்வாராயிருந்திருப்பாரோ அல்லது அவரது தொடர் புடையவரோ என்று எண்ணுமாறு அவ்வளவு பக்தியுடைய ராயிருந்தார். அவர் ஏற்படுத்திய மடத்திற்கு வியாசராயர் மடம் என்று பெயர். அம்மடத்திற்குள் கனகதாசரைச் சேருமாறு திருப்பதிப் பெருமாள் ஆணை தந்தார்.

7


அவ்வாஞ்ஞை பிரகாரம், கனகதாசர், திருப்பதிப் பெருமானிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு, தாயைப் பிரியும் சேய்போலத் திரும்பித் திரும்பி, திருப்பதிப் பெருமான் கோபுரங்களும், மலையும், கண்ணுக்குத் தெரியும் வரையில் பார்த்துக்கொண்டே பிரயாணஞ் செய்து, சோசலை சேர்ந்து, அம்மடத்தின் வாயிலில் வந்தமர்ந்திருந்தார்.

கனகதாசர் திருப்பதியின்றும் புறப்பட்டுக் களைத்து வந்துளார் என்று, பரிவுடன் அவரை வரவேற்பார் யார்? தனியாக வாயிலில் உட்கார்ந் திருப்பதைக் கண்ட, மடத்துச் சமையற்காரரும், சீடர்கள் சிலரும், பார்த்தனர். அவர் அழுக் குடையுடுத்திருப்பதையும், அவர் மேல் ஈக்கள் மொய்த்திருப்பதையும், பார்த்து "அடே நீ யார்? இங்கு எதற்காக வந்தாய்? புறப்படு, புறப்படு" என்று விரட்டினர். அதற்கு, தாசர் "நாம் இடையர் குலத்தவர். நம் தேவர் வீரையா. நம் பாட்டன் மக்களாகிய ஆடுமாடுகளை மேய்ப்பவர்" என்ற கருத்துள்ள பதம் ஒன்று பாடி "ஐயா, நான் மடத்துச் சுவாமிகளின் பாத தரிசனத்துக்காக வந்திருக் கின்றேன். தயைசெய்து பாத தரிசனம் கிடைக்குமாறு செய்யுங்கள்" என்று வேண்டிக் கொண்டார். அவர்கள் இவரைச் சற்றும் மதியாமல், "போ! மடத்தின் தூய்மை உன்னால் கெட்டு விடும். ஆகவே நீ சீக்கிரம் இவ்விடத்தை விட்டொழிவாய்" என்று கூறினர்.

வெளியாடம்பரத்தில் மயங்கும் மூடவுலகினர், தாசரது பெருமையறியாதார், அவரைத் துரத்தியதில்

ஆச்சரியமில்லை. தாசரை அவர்கள் வெறுத்து விரட்டும்போது வியாசராயர் வெளியே வந்தார். கனகதாசர் அவரைக் கண்டதும் அவரது திருவடிகளில் வீழ்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்.

வியாசராயர் தமது ஞானநோக்கால் கனகதாசரது பெருமையை யறிந்து அவரை வரவேற்றுபசரித்து, அங்கேயே யிருக்குமாறு பணித்தார். ஏனைய சீடர்களுக்கு கனகதாசர் மடத்தில் தங்குவது பிடிக்கவில்லையெனினும் குருவின் மனம் கோண ஒண்ணாது என்றெண்ணி மௌனமா யிருந்தனர். கனகதாசர் அம்மடத்தின் காவல் தொழில் பூண்டார். குருவின் உடைகளைத் தோய்த்தல் முதலிய குற்றேவல்கள் புரிந்துகொண்டு அங்கே தங்கியிருந்து பகவானுக்கு இடையறாத பாடற்றொண்டும் புரிந்து வந்தார்.



## ௭

## கனகதாசரின் பெருமை

கனகதாசர், மடத்தில் இவ்வாறு வசித்து வருகையில், வியாசராயர் இவரது பெருமையறிந்து, இவரை மரியாதையாக நடத்தி வந்தார். தமது கையாலேயே தீர்த்தப் பிரசாதங்கள் வழங்கி வந்தார். ஏனைய சீடர்கள், தாம் உயர் குலத்தைச் சேர்ந்தவர்களென்றும், கனகதாசர் கீழ்க் குலத்தைச் சேர்ந்தவரென்றும், எண்ணுகின்றவர்கள் உண்மைஞானம் பெறுதவர்கள். குலப் பெருமை பேசுங் குருடர்கள், ஆணவமலத்தால் கட்டுண்டு கிடக்கின்றவர்கள். குருவானவர் சிறந்த ஞானி. அவருக்கு உயர்வு தாழ்வு கிடையாது. ஆகவே எல்லாரையும் சமத்துவமாக நடத்தினுர். சீடர்கள், கனகதாசரிடம் குரு மரியாதையாக நடந்துகொள்ளுவதை, விரும்பவில்லை. தங்களுக்குள் பேசிக்கொள்ளுவார்களே தவிர வெளியில் ஒன்றுங் கூறமாட்டார்கள்.

ஒரு நாள், பூசை முடிந்தபிறகு, குரு வியாசராயர் வழக்கம்போல், தீர்த்தப் பிரசாதம் வழங்க ஆரம்பித்தார். அப்பொழுது அங்கிருந்து சீடர்கள், ஒவ்வொருவரும் தத்தமக்குத் தீர்த்தம் முதலில் வழங்கவேண்டுமென்று போராடினுர்கள். ஒருவர் குலத்தால் உயர்ந்தவர் என்ருர், மற்ெருருவர் கல்வியால் உயர்ந்தவர் என்ருர். இன்ெனருவர் பெரிய பண்டிதரின் மைந்தர் என்ருர். இவ்வாறு சீடர்கள் கலகம் விளைத்தனர். குரு, அவர்களது அஞ்ஞானத்தை

திற்கு மனம் இரங்கினர். அவர்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்த எண்ணினர். கனகதாசரின் பெருமையை வெளிப்படுத்தவும் விரும்பினர்.

சீடர்களனைவரையும் வியாசராயர், அழைத்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாழைக்கனி கொடுத்து, அதை யாருமில்லாத இடத்தில் யார் முதலில் தின்று வருகின்றாரோ, அவரே முதல் தீர்த்தத்திற்குரியர் என்று கூறி விடுத்தார். வாழைக்கனி பெற்ற சீடர்கள் வண்டுபோல் பறந்து சென்றனர். பல்வேறிடங் கட்குப்போய் வாழைப் பழத்தைத் தின்று மீண்டு வந்தனர். குரு ஒவ்வொருவரையும் தனித்தனியே வாழைக் கனியுண்ட வரலாற்றைக் கேட்டார். ஒருவர், நீர்த் தடாகத்தில் மூழ்கி அங்கே தின்று மீண்டதாகக் கூறினர். மற்றொருவர் மரங்களடர்ந்த மாந்தோப்பில் உள்ள ஒரு மாமரத்தின் மறைவில் தின்றதாக மகிழ்ந்து கூறினர். இன்னொருவர், தனது வீட்டில் இருக்கும் பூசை மண்டபத்தின் பின்புறம் இருட்டாயுள்ள பாகத்தில் நின்று கனியையுண்டதாகக் கழறினர், இவ்வாறு எல்லாரும் தாங்கள் குருவிடம் பெற்றுச் சென்ற பழத்தை அருந்திய விதத்தை அறிவித்தார்கள். குருவானவர், கடைசியில் கனகதாசரைப் பார்த்தார். அவர் கையில் கனியிருக்கக் கண்டார். அவரைப் பார்த்து "கனகா! நீ ஏன் பழத்தை அருந்தாது இருக்கிறாய்?" என்று கேட்டார் அதற்கு, கனகதாசர் "குருவே, யாருமில்லாத இடம் எங்கும் கிடைக்கவில்லை. ஒரு முறை தாங்களே. இறைவன் எங்கும் இருக்கின்றான்; நாம் செய்யும்

காரியமனைத்தையும் கவனித்துப் பார்த்த வண்ணமா யிருக்கிறான், என்று உபதேசஞ் செய்திருக்கிறீர்கள். அவ்வுபதேசம் என் நினைப்பில் இருந்தது. ஆகவே யாருமற்ற இடம் எனக்குக் கிடைக்கவில்லை. அப்பழத்தை அருந்தும் பேறு யான் பெறவில்லை. அப்படியே பழத்தைக் கொணர்ந்து விட்டேன். இதோ பழம் இருக்கின்றது" என்றார்.

ஏனைய உயர் குலச்சீடர்களனைவரும் கனகரின் ஞானமொழி கேட்டுத் தலை குனிந்தார்கள். கனகர் உண்மை ஞானி யென்பதை யாவரும் அறிந்தனர். அறிந்தாலும், கனகரிடத்தில் அவர்கட்குப் பொறாமை அதிகரித்ததே தவிர, அன்பு மேலிடவில்லை.

கனகதாசர் இல்லறத்தில் மனைவியுடனிருக்கும். போதே ஞானம் கைவரப் பெற்றிருந்தார் என்பதற்கு ஒரு கதை வழங்குகிறது. அது நகைச்சுவை பொருந் தியது. அதை இங்கே கூறுகின்றேன்.

ஒருநாள் கனகதாசர் மனைவி ரொட்டி சுட்டுக் கொண்டிருந்தாள். கனகதாசர் வீட்டில் ஒரு பக்கத்தில் ரொட்டி சுடுவதைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். சில ரொட்டிகள் சுட்டு ஒரு பாத்திரத்தில் வைத்திருந்தாள். சில ரொட்டிகள் வெந்துகொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் வீதியின் வழியே ஊர் நாய் ஒன்று போய்க் கொண்டிருந்தது. ரொட்டியின் வாசனை அந் நாயை இழுத்தது. ஊர் நாயானதால் அதற்குப் பசி அதிகமாயிருந்தது. மெதுவாக அவ்வீட்டின் சாரளத்தின் வழியே எட்டிப்

பார்த்தது. ரொட்டிகளைக் கண்டதும் நாய்க்கு நாக்கில் நீர் சொட்டிற்று. அங்குமிங்கும் பார்த்துப் பயந்து கொண்டு உள்ளே ஓடி ரொட்டியைக் கௌவிக் கொண்டு ஓடியது. இதைத் தாசர் பார்த்தவண்ணம் வாளா விருந்தார்.

அவரது பத்தினியார் தாசரைப் பார்த்து "இதென்ன, நாய் ரொட்டியைக் கௌவிக்கொண்டு ஓடுகின்றது. பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறீர்களே" என்று கேட்டார். தாசர் அதற்கு உடனே "ஐயையோ! மறந்து விட்டேனே! என் ஆண்டவர் எவ்வளவு பசித்திருந்தாரோ? எவ்வளவு கஷ்டப்பட்டு பயந்து இந்த வெறும் ரொட்டியை எடுத்தாரோ? இதை எப்படித் தின்பார்?" என்று கூறி அங்கிருந்த வெல்லத்தையும், நெய்யையும் கையில் எடுத்துக் கொண்டு நாயின் பின்னே ஓடி "என்னாண்டவனே வெறும் ரொட்டியைத் தின்னலாமா? வா! என்னப்பா! நெய்யும், வெல்லமும் கொணர்ந்திருக்கின்றேன். அவற்றையும் பெற்றுத் தின்ன வேண்டும். எல்லாம் உன்னுடையனவாகவே எண்ண வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். தாசர் மனைவி, நாய் சென்றதையும் தாசர் பின்தொடர்ந்ததையும் பார்த்துக் கொண்டே நின்றாள்.

நாயும் தாசர் வேண்டுகோளுக்கு இணங்கி, அவர் கொணர்ந்த வெல்லத்தையும், நெய்யையும் தின்றது. தாசர் மனைவி பார்த்துக் கொண்டிருக்கும் போது, நாய் மறைந்து விட்டது. அதன் பின்னர் நீலமேக வருணமுள்ள ஒரு வடிவம் தோன்றிற்று. அவ்

வடிவத்திற்கு நான்கு கைகள் காணப் பெற்றன. ஒரு கையில் சக்கரம், மற்ற கைகளில் சங்கு, கதை, பதுமங்கள் இருந்தன. தாசர் அவ்வடிவத்தைப் பார்த்து, "ஆண்டவனே! இதென்ன உன் கருணை! எளியேன் வீட்டில் சுடும் ரொட்டியைக் கொடுப்ப தற்கு அஞ்சுவன் என்று எண்ணி நீயே நாய் வடிவத்தில், ரொட்டிக்காக, கௌரவர் அரண் மனையை விடுத்து, விதுரன் எளிய வீட்டிற்குக் கால் கடுக்க நடந்து சென்றதுபோல், எளியேன் குடிசைக்கு வந்தாயா?" என்று கூறி வணங்கினர்.

வடிவம் மறைந்து கொண்டே வந்தது மீண்டும் நாய் வடிவம் தெரிந்தது. ரொட்டி தின்கின்ற காட்சி காணப்பட்டது. முழுதும் தின்று முடிக்காமல் நாய் ஓடிவிட்டது. தாசரும் மருண்டு வீடு திரும்பினர்.

கண்ணபிரான் பகவத்கீதையில் ஞானியின் இலக்கணங் கூற வந்தவர், நாயையும், யானையையும், புலையனையும் யார் சம நோக்குடன் காண்கின்றரோ அவரே ஞானியாகும் என்கிருர். நமது தாசரும் நாயையும் நாராயணனுகவே நினைத்தார். ஆகவே நாராயணன் நாய் வடிவத்தில் வலிய வந்து, தாசர் வீட்டு ரொட்டியைத் தின்று, அவருக்குக் காட்சி யளித்தான்.

## 10

## கனகதாசர் வீடு பெற்றமை

வியாசராயர் மடத்தில் கனகர் தங்கியிருக்கும் போது கணக்கற்ற அற்புத லீலைகள் புரிந்தார். ஒரு முறை வியாசராயர் உடுப்பி சென்றார். உடுப்பி மலை நாட்டைச் சேர்ந்த விஷ்ணுஸ்தலம். அங்கே சிறந்த கிருஷ்ணன் கோயில் உண்டு. வியாசராயர் அவ் வூருக்குச் சென்று கிருஷ்ணன் கோயிலுள் புகுந்து கிருஷ்ணனுக்குப் பூஜை புரியத் தொடங்கினர்.

கனகதாசர் குலத்தாலும், கோலத்தாலும், மக்கள் கண்ணிற்கு, இழிவாகக் காணப்பட்டார். அக் காலத்தில் சாதி சமயச் செருக்கால், கோயிலினுள் எல்லாரும் செல்லமுடியாது. ஆகவே, கனகதாசர் கோயிலுக்குள் போகமுடியாது தவித்தார். அங்குள்ள அர்ச்சகர் முதலியோரைக் கெஞ்சினர், கும்பிட்டார், கூத்தாடினர். அவரை யுள்ளேவிட மறுத்தனர் எல்லோரும். கணக்கற்ற மக்கள் கோயிலுள் போவதும் வருவதுமாயிருந்தனர். ஆனால் நம் கனகருக்கு உள்ளே போகமுடியாது போயிற்று. எப்படியாவது கண்ணனைக் கண்டுவிட வேண்டும் என்று கங்கணங் கட்டினர். விக்கிரகத்தின் அருகே இருந்த பெரிய சாளரத்தின் வழியே பார்க்க வந்து நின்றார். இழிகுலத்தவர் நிழல் இறைவன் மேல் விழ வொண்ணாது என்றெண்ணினர் அங்குளார். உடனே அதையும் அடைத்து விட்டார்கள் கோயில் அதிகாரிகள்.

கனகதாசர் பிடிவாதமாய் கிருஷ்ண விக்கிர கத்தின் பின் புறமாய் இருந்த ஒரு சிறு சாளரத்தின் வழியே கிருஷ்ணனைப் பார்த்து "ஏ! கண்ணு! உனைப் பிரிந்து உயிர் வாழ முடியுமா? நீ வெறுத்தால், யாரிடஞ் சொல்லுவேன் என் குறையை" என்ற கருத்துள்ள ஒரு பதம் பாடினார். உடனே கண்ணன் பின்புறம் திரும்பி கனகதாசருக்குக் காட்சியளித்தார். விக்கிரகம் திரும்புவதைப் பார்த்த வியாசராயர் ஆச்சரியப்பட்டார். விக்கிரகம் திரும்பும் பக்கத்தைப் பார்த்தார். கனகதாசர் சாளரத்தில் வீற்றிருப்பதைக் கண்டு அளவற்ற ஆச்சரியமும், ஆனந்தமும் கொண்டார். கனகரது பெருமை யுணர்ந்தார் குரு. மிகவும் பாராட்டினார்; கனகதாசரை யுள்ளே வர வொட்டாது தடை செய்த கயவர்கள் தாங்கள் செய்தது தவறென்றுணர்ந்து அவரிடஞ் சென்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.

இன்னும் உடுப்பி சென்றால், அங்குள்ள கிருஷ்ணன் கோயிலில், கனகதாசர் நின்று தரிசித்த சாளரத்திற்கு "கனகனது கிண்டி" (கனகனது சாளரம்) என்று பெயர் வழங்குவதை யறிந்து இன்புறலாம். அவ் விக்கிரகம் அச்சாளரத்தைப் பார்த்தவண்ணம் இருப்பதைக் காணலாம். உடுப்பிக்குப் போகின்றவர்கள் அக் கோயிலில் சுவாமி தரிசனம் செய்த பிறகு கடைசியாக அந்த சாளரத்தில் நின்று தரிசித்தால் தான் கோயிலுக்குப்போன பலன் சித்திக்கும் என்று அங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.


ஆகவே கோயிலுக்குச் சென்று சுவாமிதரிசனஞ் செய்யப் போகின்றவர்கள், அந்தச் சாளரத்தின்

வழியே, கிருஷ்ணனைத் தரிசித்து வருகின்றனர். ஆண்டவன், அடியார் அன்பெனும் வலையில் அகப்படுபவன் என்பது புலனாகின்றது. கனகதாசர், ஸ்ரீ விஷ்ணு பக்தசாரம், மோகனதரங்கிணி, நளசரித்திரம், ராமத்தியான சரித்திரம், நரசிம்மஸ்தோத்திரம் முதலிய நூல்கள் கன்னட மொழியில் இயற்றி என்றும் அழியாப் புகழ் எய்தியுள்ளார்.

கனகதாசர் இவ்வுலகில் பூதவுடலில் 91 வயது வரையில் வாழ்ந்து, அரிசேவை, தமது திருப்பாசுரங்கள் மூலமும், பஜனையின் மூலமும், புரிந்து, இறுதியில் இவ்வுலகை விட்டுப் போக எண்ணி காகிநிலையில் உள்ள ஆதிகேசவஸ்வாமியிடஞ் சென்று "ஆண்டவனே! எய்த்தேன், நாயேன், இனி இங்கிருக்ககில்லேன் உன்னிதயத் தாமரையில் இடங் கொடு" என்று பிரார்த்தித்தார். சுவாமியும் வாயைத் திறந்து அடியாரது விருப்பப்படி தனது இதயத் தாமரையில் இடங் கொடுத்தார். இன்றுங்கூட காகிநிலையில் உள்ள ஆதிகேசவஸ்வாமி விக்கிரகத்தின் அருகே அமைந்துள்ள விக்கிரகம் கனகதாசரது என்று அங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

எங்ஙனமெனினும் கனகதாசர் சிறந்த வைணவ அடியார்களில் ஒருவரென்றும், அவரை ஆண்டவன் வலிய தடுத் தாட்கொண்டாரென்றும், உலகில் பல மகிமைகள் புரிந்தாரென்றும், இறுதியில் இறைவனுடன் கலந்தார் என்றும் அறிகின்றோம்.

வாழ்க கனகதாசர்
வாழ்ககன்னடம்
வாழ்க கண்ணன் கழல்



THE MADURA TAMIL SANGAM